Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 06, 2021

திங்கட்கிழமை செப்டெம்பர் 6, 2021 | ஒளி: 07 கதிர்: 93 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# தவிசாளரின் மூக்கை துண்டாடிய பெண்

என். ஆராச்சி

தெரணியகல பிரதேச சபையின் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் லக்ஸ்மன் ராஜகருணாவின் மூக்கை பெண்ணொருவர் துண்டாடிய சம்பவம் நேற்று முன்தினம் (4) பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2



அவசரகால சட்டம்

# அபாயமானது



## அதிகார ஆயுதம்

அத்தியாவசிய பொருள்கள் தொடர்பான பிரச்சினையைத் தீர்ப்பதாயின் ஜனாதிபதிக்கு 3 வழிகள் இருந்தன எனத் தெரிவித்துள்ள ஜே.வி.பியின் தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க, அதிகாரத்தை கையிலெடுக்கும் ஆயுதமாகவே அவசரகாலச்சட்டம்

தொடர்ச்சி P2

**பொத்துவில் முதல் பொலிகண்டி வரை எழுச்சிப் பயணத்தின் தொடர்ச்சியான விசாரணைகள், கைதுகள்**

**அரசினால் அறிவிக்கப்பட்ட அவசரகால சட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அபாய நிலைகள்**

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை அமர்வு, இம்மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகளின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் கடிதமொன்று, மனித உரிமைகள் பேரவை ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில், தற்போது அமல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டம் அபாயகரமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான மக்கள் பேரெழுச்சிப் பயணத்தின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள், கைதுகள், அரசினால் அறிவிக்கப்பட்ட அவசரகால சட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அபாய நிலைகள் உள்ளிட்ட விடயங்களும் குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





## இன்று விவாதம்

ஒகஸ்ட் 30ஆம் திகதி முதல் நாடு பூராவும் அமல்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலைமை குறித்து, பாராளுமன்றத்தில் இன்று (06) விவாதிக்கப்படவுள்ளது.

அத்தியாவசிய பொருள்களை விநியோகம் செய்வதற்காக அவசர கால நிலைமை நாடளாவிய ரீதியில் அச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்பதுடன் அந்த விசேட வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியிருந்தது.

இந்நிலையில், இன்றையதினம் பாராளுமன்றத்தில் கேட்கப்பட்டிருந்த வாய்மூல விடைக்கான வினாக்களுக்கு பிறிதொரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற தொடர்பாடல் அலுவலகம் அறிவித்துள்ளது.

## அமைச்சுகளின் செலவீனங்களை குறைப்பதற்கு நடவடிக்கை

அமைச்சுகளில் குறைக்கக்கூடிய செலவீனங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் நிதியமைச்சு அறிவித்துள்ளது. குறித்த அறிக்கையை, இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு, நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார்.




தொடர்ச்சி P2

## கோதுமை மாவின் விலை அதிகரிக்காது

கோதுமை மாவின் விலையை அதிகரிப்பதற்கு எவ்விதத்திலும் அனுமதியளிக்கப்படவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது. கூடுதலான விலைக்கு கோதுமை மாவை விற்பனை செய்யும் வர்த்தகர்களைத் தேடி, தொடர்ச்சியான தேடுதல்கள் முன்னெடுக்கப்படும் என அந்த அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் ஷாந்த திஸாநாயக்க (ஓய்வு பெற்றவர்) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்கள் குறைவு

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதன் பின்னர், மருத்துவ ஒட்சிசனில் தங்கியிருந்து சிகிச்சைப்பெற வேண்டிய நோயாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

“தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், சுகாதார ஆலோசனைகளை பொதுமக்கள் உரியவாறு பேணுவதால், இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது” என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2



## நல்லூர் தேர் திருவிழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க, யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்று (05) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தொடர்ச்சி P2



## ‘டக்ளஸ் மீது நம்பிக்கை இல்லை’

முழுச் செய்தி P4



## 20–29 வயதுக்கு இடையில் இன்று முதல் தடுப்பூசி

**4 மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும்**

20 வயதுக்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் நான்கு மாவட்டங்களில், இன்று (06) முதல் முன்னெடுக்கப்படும் என அரசாங்க தகவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## மணமகன் தேவையால் விழிபிதுங்கும் ஆண்கள்

கொரோனா தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. 20 வயது முதல் 30 வயது வரையிலானோருக்கு தடுப்பூசிகளை ஏற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தொடர்ச்சி P2



## ரவி சாஸ்திரிக்கு கொரோனா



இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ரவிசாஸ்திரிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதையடுத்து அவருடன் தொடர்பில் இருந்த 3 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் ரவிசாஸ்திரிக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, ரவி சாஸ்திரியுடன் பயிற்சியில் இருந்த பந்துவீச்சு பயிற்சியாளர் அருண், பீல்டிங் பயிற்சியாளர் ஸ்ரீதர், நிதின் படேல் உள்ளிட்டோர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

இந்திய வீரர்கள் அனைவருக்கும் இரண்டு முறை கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. நெகட்டிவ் என வந்தவர்கள் மட்டுமே இன்றைய 4-வது நாள் ஆட்டத்தில் அனுமதிக்கப்பட்டனர்.

இங்கிலாந்தில் இந்திய அணி சுற்றுப்பயணம் செய்து வரும் நிலையில் 4-வது டெஸ்ட் போட்டி ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

## 99 வயதான மூதாட்டியை கொரோனா கொன்றது

எம்.றொசாந்த்

வல்வெட்டித்துறை சிவகுரு வீதி, மாதவடியைச் சேர்ந்த தேசோமயானந்தம் புஸ்ப காந்தியம்மா (வயது 99) என்ற மூதாட்டி கொரோனோ வைரஸ் தொற்றுக்கு உள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.



1922ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி பிறந்த புஸ்பகாந்தியம்மாவுக்கு 12 பிள்ளைகளும் 64 பேரப்பிள்ளைகளும் 133 பூட்டப்பிள்ளைகளும் 42 கொள்ளுபேரப்பிள்ளைகளும் உள்ளனர்.

அவர் தனது வீட்டில் நேற்று முன்தினம் (4) திடீரென நோய் வாய்ப்பட்டார். அதன்பின்னர், மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது, அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

அதனையடுத்து அவரது சடலத்துக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனோ தொற்று உறுதியாகியுள்ளது.

## ஹீன் மெனிக்கே காலமானார்

கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்த மஹியங்கனை தம்பானே ஆதிவாசிகளின் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோவின் மனைவி ஹீன் மெனிக்கே மரணமடைந்தார்.

கொவிட்-19 தொற்றுக்குள்ளாகிய நிலையில் அவர், மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, நிமோனியாவுக்கான சிகிச்சை பெற்று வந்த நிலையிலே, பேராதனை மருத்துவமனைக்கு 2ஆம் திகதி மாற்றப்பட்டார்.

> **வேடுவர் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 40 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருந்தமை இனங்காணப்பட்டது**

அங்கு அவர், அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் விசேட கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையிலேயே, சனிக்கிழமை (04) இரவு மரணமடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2



## கொரோனா சடலங்களை சுட்டதீவில் தகனம் செய்யலாம்

நடராஜா கிருஸ்ணகுமார்

கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழக்கும் சடலங்களை, சுட்டதீவில் தகனம் செய்யலாம் என, கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# அதிகார ஆயுதம் அபாயமானது

பொதுமக்கள் பாதுகாப்ப சட்டம் அத்தியாவசிய பொதுமக்கள் சேவை மற்றும் நுகர்வோர் சட்டம் தொடர்பில் கவனம் செலுத்தாமல், அவசரகாலச்சடத்தை அமுல்படுத்தியமை தொடர்பில் மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும் என்றார்.

கட்சியின் தலைமையகத்தில் நேற்று (5) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் அவசரகால நிலை இருப்பதாக காரணம் காட்டி, அவசரகால சட்டத்தை பிரகடனப்படுத்தும் உரிமையை ஜனாதிபதி எடுத்துக்கொண்டார்.

சாதாரணமாக எமது நாட்டில் அரசியலமைப்பு உள்ளது. அதன்மூலம் உருவாக்கப்பட்ட பாரிய சட்டத்திட்டங்கள் உள்ளன. அவைதான் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, திருத்தப்பட்டு நிறைவேற்றப்புடுகின்றன என்றார்.

ஆனால், இந்த சகல சட்டங்களையும் தேவையென்றால் நீக்க, தேவையென்றால் செயற்படுத்த அதுமாத்திரமின்றி புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தவும் தற்போது ஜனாதிபதி அதிகாரமொன்றை பெற்றுள்ளார்.

இதுவரை பாராளுமன்ற மூலம் உருவாக்கப்பட்ட அனைத்து சட்டங்களையும் கீழிறக்கி புதிய சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி தனத்து கையில் எடுத்துள்ளார் எனத் தெரிவித்த அவர், இதனூடாக சிவில் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாகும் என்றார்.

நீதிமன்ற அனுமதியின்றி எவரையும் கைதுசெய்யலாம். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாமல் நீண்டகாலம் தடுத்து வைக்கலாம். அதேபோல் காணி தவிர்த்து எதாவவொரு சொத்தையம் உரிமை கொண்டாட கூடிய சட்டத்தை செயற்படுத்த முடியும் என்றார்.

பொருள்களின் விலை அதிகரிப்பு, தொகை வர்த்தகர்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவே நுகர்வோருக்கு பாதுகாப்புக்காக இந்த சட்டம் உருவாக்கப்பட்டுள்ளதாக சமூகத்தில் கருத்தொன்று நிலவுகிறது என்றும் அத்தியாவசிய சேவையாக அறிவிக்க , பொருள்களுக்கு கட்டுபாடு விலையை நிர்ணயிக்க, சுற்றிவளைப்புகளை முன்னெடுக்கவோ ஜனாதிபதிக்கு இவ்வாறான அதிகாரங்கள் தேவையில்லை.

அத்தியாவசியப் பொருள் தொடர்பாக பிரச்சினை என்றால் கொதுமக்கள் மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் நடவடிக்கை எடுக்க முடியும் எனத் தெரிவித்த அனுரகுமார எம்.பி, அவ்வாறு இருக்கும் போது, அத்தியாவசிய பொருள்களின் விலையை கட்டுபடுத்தம் நோக்கில் அவசரகால சட்டத்தை பிறப்பிக்கும் அதிகாரத்தை ஏன் எடுத்துக்கொண்டார் என்பதை நாட்டு மக்களுக்கு தெளிவுப்படுத்த வேண்டும் என்றார்.

ஐ.நா ஆணையாளருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது என தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி தெரிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். ஸ்ரீகாந்தா மற்றும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டுள்ளனர்.

கடிதத்துடன் விரிவான அறிக்கையொன்றும் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என தமிழீழ விடுதலை இயகத்தின் ஊடகப்பேச்சாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

46/1 பிரேரணையின் பின்னரான அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணி அபகரிப்பு, தொல்லியல் நடவடிக்கைகள், நினைவேந்தல்களுக்கான தடைகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் அடிப்படையிலான கைதுகள், தடுத்து வைத்தல், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகங்களில் இராணுவ அதிகாரிகளை நியமித்தல் உள்ளிட்ட விடயங்கள் இந்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# அமைச்சுகளின் செலவீனங்களை குறைப்பதற்கு நடவடிக்கை




குறைக்கக்கூடிய செலவீனங்கள் மற்றும் மீதப்படுத்த எதிர்பார்க்கப்படும் நிதி தொடர்பிலும் திறைசேரிக்கு கூடிய விரைவில் அறிவிக்குமாறு, நிதியமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கொரோனா தொற்றுக் காரணமாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் ஏற்பட்டுள்ள நிலைமையின் மத்தியில் அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதால், செலவீனங்களை குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், தற்போது ஆரம்பிக்க முடியாத வேலைத்திட்டங்கள், அமைச்சுகளின் புதிய கொள்வனவுகள், கட்டட நிர்மாணங்கள் மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, சமீபத்தில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது, அரசாங்கத்தின் செலவீனங்களை மட்டுப்படுத்துவது தொடர்பில் நிதியமைச்சரால் அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோதுமை மாவின் விலை அதிகரிக்காது

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 12 ரூபாயினால் அதிகரிக்கப்படும் என பிரிமா நிறுவனம் அறிவித்திருந்தது.

இந்நிலையில், கொழும்பில் நேற்று (05) ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய கூட்டுறவுச் சேவைகள் சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, “கோதுமை மாவை இறக்கமதி செய்யும் நிறுவனங்களுக்கும் அரசாங்கத்துக்கு இடையில் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. அதன்பின்னர், விலையை அதிகரிக்கமாட்டோம் என அந்நிறுவனங்கள் உத்தரவாதம் அளித்துள்ளன” என்றார்.

# ஒட்சிசன் தேவைப்படும் நோயாளர்கள் குறைவு

“சுகாதார ஒழுங்கு விதிகளைத் தொடர்ந்தும் பின்பற்றும் பட்சத்தில் நாட்டில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த முடியும்” என சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.



இதேவேளை, தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கை மீறி செயற்படுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டியுள்ளார்.



# நல்லூர் தேர் திருவிழா

அதிகாலை நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை இடம்பெற்றது. முன்னதாக ஆறுமுக சாமி மஞ்சள் அலங்காரத்தில் உள்வீதி உலா வந்தார்.

அதனைத் தொடர்ந்து வேல் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய், சிறிய தேரில் ஆரோகணித்து, உள்வீதி உலா வந்தார்.

கொரோனோ பெருந்தொற்றுக் காரணமாக இம்முறை கோவில் வருடாந்த மஹோற்சவம் பக்தர்களின் பங்கேற்பின்றி சிவாச்சாரியார்களுடன் உள்வீதியில் இடம்பெற்றது.

அதனால், இம்முறை தேர்த் திருவிழாவின் போது தேர் இழுக்காது, வேல் பெருமான், வள்ளி, தெய்வானையுடன் உள் வீதியில் சிறிய தேரில் ஆரோகணித்து அருள்காட்சி அளித்தார்.

அடியவர்கள் ஒன்றுகூடினால் கொரோனா தொற்றுப் பரவல் ஏற்பட கூடிய அபாயம் காணப்படுவதன் காரணமாகவே, இவ்வாறு கோவிலை சுற்றிப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில், நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார், பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

வீதித் தடைகளைத் தாண்டி யாரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பதுடன், கோவிலுக்கு முன்பாக பொலிஸாரின் பஸ் ஒன்றும் வீதிக்கு குறுக்காக நிறுத்தப்பட்டிருந்தது.

(படங்களும் தகவலும் எம். றொசாந்த்)

# மணமகன் தேவையால் விழிபிதுங்கும் ஆண்கள்

60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கும் 30 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்ட வர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் சிலர் செலுத்திக்கொள்ளாமல் இருக்கின்றனர்.



மணமகன் தேவை

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட கணினித் துறையில் வேலை பார்க்கும் 32 வயது நிரம்பிய அழகிய “அஸ்ட்ராசெனிக்கா” தடுப்பூசி போட்ட மணமகளுக்கு அதே வகையான அல்லது “சினோபாம்” தவிர்ந்த ஏனைய தடுப்பூசி போட்ட தகுந்த தொழிலும் நற்குணமுமுள்ள வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். இந்துக்களும் கிறிஸ்தவர்களும் விரும்பப்படுவர்.

இந்நிலையில், ஒருவகையான தடுப்பூசியின் பெயரைக் குறிப்பிட்டு, அந்த வகையைச் சேர்ந்த தடுப்பூசியை ஏற்றிக்கொண்ட ஆண்கள் மட்டுமே தேவையென மணமகன் தேவை விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இந்த விளம்பரம் சமூக வலைத்தளங்களில் வைரலாகிறது.

# தவிசாளரின் மூக்கை துண்டாடிய பெண்

இதனையடுத்து அவர், தெரணியகல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரணியகல பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச சபையின் தவிசாளர் தனது வாகனத்தில் தெரணியகல நகரை நோக்கி நேற்று முன்தினம் (04) பயணித்துக் கொண்டிருந்த போது, குறித்த பெண் வாகனத்தை வழிமறித்துள்ளார்.

இதன் பின்னர் குறித்த இருவருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், சந்தேகநபரான பெண், ஆயுதமொன்றினால் தவிசாளர் மீது தாக்குதல் நடத்திய போது, அவரின் மூக்கில் காயம் ஏற்பட்டுள்ளது.

எனினும், தவிசாளரும் அப்பெண்ணின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதால் அப்பெண்ணும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவத்துக்கு இருவருக்கும் இடையிலான சட்டவிரோத உறவே காரணமாக இருக்கலாம் என சந்தேகித்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# 20–29 வயதுக்கு இடையில் இன்று முதல் தடுப்பூசி

அதன்பிரகாரம், கொழும்பு, களுத்துறை, கம்பஹா மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்டங்களில் கொரோனா தடுப்பூசிகள் ஏற்றப்படும் மத்திய நிலையங்களில் தடுப்பூசிகள் ஏற்றப்படும். கொழும்பு மாவட்டத்தில் தடுப்பூசி மையங்களுக்கு மேலதிகமாக. விஹாரமஹாதேவி பூங்கா, தியன உயன, பனாகொட இராணுவ முகாம், வேரஹெர இராணுவ வைத்திய படையணி தலைமையகம் ஆகியவற்றிலும் தடுப்பூசிகள் ஏற்றப்படும்.




அந்தந்த மாவட்டங்களில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வசிக்கும் சகல குடும்பங்களில் இருக்கும் 20-29 வயதுகளுக்கு இடைப்பட்டவர்கள் இந்தத் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியும்.

# சுட்டதீவில் தகனம் செய்யலாம்

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கிளிநொச்சி நகரத்தில் மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான வசதிகள் இல்லை எனவும் அதற்கான கட்டடத்தை அமைப்பதற்கும் 3 கோடி ரூபாய் வரையான நிதி தேவைப்படுகின்றது எனவும் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக ஆளுநர் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் தகவல்களை தெரிவித்து உள்ளதாகத் தெரிவித்த அவர், இதேவேளை கொரோனா காரணமாக உயிரிழப்போரின் சடலங்களை, உமையாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சுட்டதீவில் தகனம் செய்யலாம் எனவும் கூறினார். சுட்டதீவின் 05 கிலோமீற்றர் சுற்றளவில் மக்கள் குடியிருப்புகள் இல்லை எனத் தெரிவித்த அவர், “இதேவேளை, கொரோனா காரணமாக உயிரிழக்கும் சடலங்களை கூடுதலாக யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் தற்போது எரியூட்டப்படுகின்றன. போக்குவரத்து நெருக்கடிகளை குடும்பங்கள் சந்திக்கின்றன. கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் உள்ள அமரர் ஊர்தியை பிரதேச சபையிடம் கையளிக்கப்படுமானால், இலவசமாக பிரதேச சபை சடலங்களை எரியூட்டுவதற்கான போக்குவரத்தில் ஈடுபடும். அமரர் ஊர்தி முன்பு பிரதேச சபையிடம் தான் இருந்தது” எனவும் தவிசாளர் தெரிவித்தார்.




# ஹீன் மெனிக்கே காலமானார்

இவர் ஒன்பது பிள்ளைகளின் தாயாராவார். இவரும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த பலரும் கடந்த 29ஆம் மஹியங்கன மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுருந்தனர். அந்த வேடுவர் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 40 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருந்தமை இனங்காணப்பட்டது. அத்துடன், அங்கு 100க்கும் மேற்பட்டவர்களுக்கு பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கண்டி தலதா மாளிகையின் எசல பெரஹராவின் முக்கிய அங்கமான ரந்தோலி பெரஹராவில் ஒரு நிகழ்வாக ‘தேன் பூஜை’ இடம்பெறும். அதிலும் ஹீன் மெனிகே மற்றும் வன்னியலத்தோ குழுவினர் கலந்துகொண்டனர். அத்துடன், அன்று (கடந்த 18ஆம் திகதி) தலதா மாளிகையில் புனித சின்னத்தையும் வழிபட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந்த நாள்களில் காய்ச்சல் இருந்தால்

# ‘டெங்குவாகவும் இருக்கலாம்’

குறிப்பாக, இந்த நாள்களில் காய்ச்சல் காணப்படுமாக இருந்தால் அது டெங்குக் காய்ச்சலாக இருக்கக்கூடுமென தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்த அவர், காலை 6 மணியிலிருந்து 11 வரையிலும், மாலை 03 மணியிலிருந்து இரவு 7 மணி வரையிலும் டெங்கு நுளம்பின் தாக்கம் இருக்கும் எனவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் தெரிவித்தார்.

இந்த நாள்களில், பெரும்பாலானவர்கள் வீட்டிலிருந்தே வேலை செய்வதால், டெங்கு நுளம்புகள் தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். குழந்தைகளைத் தூங்க வைக்கும்போது, நுளம்பு வலைகளை பயன்படுத்துவது முக்கியம். வீட்டில் உள்ளவர்களுக்கு காய்ச்சல் இருக்குமாக இருந்தால், அது டெங்குக் காய்ச்சலாக இருக்கக்கூடும். நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவது போல, டெங்கு காய்ச்சலும் பரவி வருகிறது.

காய்ச்சல் உள்ளிட்ட டெங்கு காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் சமூக வைத்திய நிபுணர் ஹிமாலி ஹேரத் அறிவுறுத்தினார்.







# யார் இந்த காத்தான்குடி ஆதில்?

■ கனகராசா சரவணன்

நியூசிலாந்தில் ஒக்லாந்திலுள்ள விற்பனை நிலையமொன்றில் மக்கள் மீது தாக்குதல் நடத்திய நிலையில் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டவர் இலங்கை காத்தான்குடியைச் சேர்ந்த 31 வயதுடைய முஹமது சம்சூதீன் ஆதில் என அரச புனலாய்வு துறையினரால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் இலங்கையைச் சேர்ந்தவர் எனவும் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளுடன் தொடர்புபட்டவர் என நியூசிலாந்து நாட்டு பிரதமர் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், இவர் தொடர்பாக இலங்கை குற்ற புலனாய்வு பிரிவினர் மற்றும் அரச புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட விசாரனையில் இவர் காத்தான்குடியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டார்.

காத்தான்குடி கபூர் கடை வீதியைச் சேர்ந்த அதிபர் சம்சூதீன் முஹமது இஸ்மாயில் சரிதா தம்பதிகளுக்கு 1989ஆம் ஆண்டு கடைசி மகனான முஹகமது சம்சூதீன் ஆதில் பிறந்துள்ளார்.

அவருக்கு ஒரு சகோதரியும் 2 சகோதர்களும் உள்ளனர். 4 பேரை கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த ஆதில், ஆரம்பக் கல்வியை மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் பயின்று வந்துள்ள நிலையில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக குடும்பத்துடன் 1998 ஆம் ஆண்டு (ஆதிலுக்கு 8 வயதில் இருக்கும் போது) இடம்பெயர்ந்து கொழும்பு மொரட்டுவையில் தங்கி வாழ்ந்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் க.பொ. உயர்தரம் கல்வி கற்று 2006 ஆம் ஆண்டு பரீட்சை எழுதிய பின்னர், 2011 ஆம் ஆண்டு நியூசிலாந்திற்கு சென்று குடியேறியுள்ளான்.

இவரின் தந்தையார் மாளிகாவத்தை அல் ஹிதாய பாடசாலையில் 2008 ஓய்வு பெறும் வரை அந்தப் பாடசாலை அதிபராக கடமையற்றினார். அவரது மகள் கனடாவில் குடியேறிய நிலையில், தந்தையார் அவருடன் கனடாவிற்கு சென்று குடியேறி வாழந்துவருகின்றார்.



அதேவேளை ஒரு சகோதரன் கட்டாரில் திருமணம் முடித்துள்ளார். அடுத்த சகோதரன் சவூதியில் இருப்பதாகவும் கொலன்னாவையில் உள்ள சொந்த வீட்டை வாடகைக்கு கொடுத்துள்ள தாயார், காத்தான்குடி கபூர் கடை வீதியிலுள்ள தனது வீட்டில் வசித்துவருகின்றார்.

இந்த நிலையில் குடும்பத்தில் கடைசிப் பிள்ளையான முஹமது சம்சூதீன் ஆரிப், நியூசிலாந்தில் குடியேறிய பின்னர், அங்கு பல்வேறு குற்றங்கள் காரணமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி வந்துள்ளதை நியூசிலாந்து பொலிஸார் கண்டுபிடித்து, அவரைப் பின் தொடர்ந்துள்ளனர். இந் நிலையிலேயே அந்நாட்டு பொலிஸாரால் ஆதில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஆதில், அவருடைய குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் தொடர்பில், அரச புலனாய்வு பிரிவினர், காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என அந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# ஊரடங்கு சட்டத்தை மீறியோருக்கு எச்சரிக்கை

■ ஷாஜஹான்

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலின் உச்சத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இக்கால கட்டத்தில், நீர்கொழும்பு, கட்டானை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாகனங்களில் பயணித்தவர்களை கட்டானை பொலிஸார் சோதனைக்கு உட்படுத்தினர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறியவர்கள் சிலரை எச்சரித்தும் சிலருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.





# ஆயுர்வேத மருத்துவத்தின் தரத்தை நிர்ணயிக்க வேண்டும்



ஆராய்ச்சி முடிவுகளை உலகுக்கு முன்வைத்து சுதேச வைத்தியம், ஆயுர்வேத மருத்துவத்தின் தரத்தை நிர்ணயிக்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

மொனராகலை, சிரிகலவில் அமைக்கப்பட்டுள்ள ராஜபுர ஆயுர்வேத வைத்தியசாலையை திறந்து வைக்கும் நிகழ்வில், அலரி மாளிகையில் இருந்து காணொளி தொழில்நுட்பம் ஊடாக கலந்து கொண்ட போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், அரசாட்சிக்கும், மருத்துவத்துக்கும் திறமையான மன்னர்கள் இருந்த பெருமைக்குரிய வரலாறு இலங்கைக்கு உள்ளது. எமது முன்னோர்கள் பாதுகாத்த, எமது சுதேச சிகிச்சை முறைகளை அவ்வாறே எமது எதிர்கால தலைமுறையினருக்கு பாதுகாத்து கையளிப்பது போன்றே அதனை சர்வதேசத்துக்கு அறிமுகப்படுத்துவது காலத்தின் தேவையாகும் என நாம் நம்புகின்றோம் எனவும் தெரிவித்தார்.

சுதேச வைத்தியம் என்பது எமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். அன்று மேற்கத்தேய வைத்திய முறை பிரசித்தி பெறாத காலப்பகுதியில் சுதேச மருத்துவத்தின் மூலமே மக்கள் பூரணமாக குணப்படுத்தப்பட்டனர்.

எவ்வாறான நோய்களுக்கும் நாட்டு வைத்தியர்களாலேயே சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. இன்றும் நாட்டு வைத்திய பரம்பரையில் உருவாகிய நாட்டு வைத்தியர்கள் காணப்படுகின்றனர் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

கடந்த இரு வாரங்களாக

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிப்பு

நாட்டில் கடந்த இரு வாரங்களாக ஏற்றுக்கொள்ளப்படாத முறையில் பல்வேறு தரப்பினரும் அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிகரித்திருப்பதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கப்பட்டமையைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்டுள்ளதோடு, இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விலையை விட அதிகளவான விலைக்குப் பொருள்களை விற்பனை செய்வோருக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இதேவேளை, விலை அதிகரிப்புக்கு எதிராகக் குரல் கொடுத்துவந்தவர்கள் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தவறான அர்த்தங்களை கற்பித்து வருகிறார்கள். இது தொடர்பில் தான் கவலையடைவதாகவும் அவர் தெரிவித்தார்.




# தனிமைப்படுத்தலை நிறைவு செய்த சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி

முழுமையாகத் தடுப்பூசிகளை ஏற்றிக்கொண்டவர்கள், தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த சுற்றுலாப் பயணிகள், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு செல்வதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கியுள்ளார்.

சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கும் தீர்மானத்தை அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

ஹோட்டல்களில் உள்ள கட்டாய தனிமைப்படுத்தலை நிறைவு செய்த, முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக்கொண்ட சுற்றுலாப் பயணிகள் தங்க வைக்கப்பட்ட ஹோட்டல்களில் உள்ள மதுபானசாலைகள், தேநீர் நிலையங்கள் உள்ளிட்ட வசதிகளை அனுபவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுற்றுலாத்துறை தொடர்ந்து இயங்குவது பொருளாதாரத்துறைக்கு அவசியமான ஒன்று எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# பிரிமா மாவின் விலை அதிகரிப்பு சட்டவிரோதமானது

நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து வரும் நிலையில் மாவின் விலையை பிரிமா நிறுவனம் சட்டவிரோதமாக அதிகரித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், நாட்டில் பொருளாதார நெருக்கடி தற்போது ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில், பிரிமா நிறுவனம் கோதுமை மாவின் விலையை 12 ரூபாயால் அதிகரித்துள்ளது. இதுவொரு சட்டவிரோதமான செயற்பாடு என்றார்.

அத்தியாவசிய பொருள்களின் விலையை அதிகரிக்க வேண்டுமாக இருந்தால் அது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபைக்கு அறிவிக்க வேண்டும். எனினும், மாவின் விலை அதிகரிப்பு தொடர்பில் பிரிமா நிறுவனம் அவ்வாறான எந்தவோர் அறிவிப்புகளையும் விடுக்கவில்லை என்றார்.

தான் நினைத்ததுபோல மாவின் விலையை பிரிமா நிறுவனம் அதிகரித்துள்ளமை மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல ஒரு செயற்பாடு எனவும் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இதன்போது தெரிவித்தார்.

பிரிமா நிறுவனத்துக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டு, பழைய விலைக்கே மாவை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் பாரியவில் வரி மற்றும் ஊழல் இடம்பெற்றுள்ளன. சீனி ஒரு கிலோகிராமின் இறக்குமதி வரி 50 ரூபாயாக காணப்பட்டது. எனினும் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அதனை 25 சதமாக மாற்றியது. இதனூடாக பாரிய வரி ஏய்ப்பு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

சதொச ஊடாக வழங்கப்படும் சீனி, வியாபாரிகள், தரகர்கள் பதுக்கி வைத்திருந்த நிலையில் அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டவையே என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.





பொறுமையின் எல்லையில் வடக்கு கடற்றொழிலாளர்கள்

# 'டக்ளஸ் மீது நம்பிக்கை இல்லை'

## போராட்டத்தில் குதிக்கவும் தீர்மானம்

■ எஸ். நிதர்ஷன்

இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோதச் தொழில் முறைகளால் ஏற்படுகின்ற பாதிப்புகளில் இருந்து எங்களைப் பாதுகாப்பதற்கு, இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ள வடக்கு கடற்றொழிலாளர்கள், தாங்கள் பொறுமையின் எல்லையில் இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

யாழில், நேற்று (05) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே, யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர் சமேளனத்தின் தலைவர் அன்னராசா, உப தலைவர் வர்ணகுலசிங்கம் ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும், இலங்கை அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினைக் கண்டித்துள்ள வடக்கு கடற்றொழிலாளர்கள், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதிருந்த நம்பிக்கையை இழந்து விட்டதாகவும் தமது கடல் வளத்தையும் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானித்திருப்பதாகவும் எனவே, எமது மக்களை அணி திரட்டி போராட்டங்களை நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

அதனடிப்படையில், கட்டம் கட்டமாக மக்கள் போராட்டங்களை விஸ்தரிக்க தீர்மானித்திருக்கின்ற நாங்கள், முதற்கட்டமாக சமூக இடைவெளிகளை மதித்து, கொரோனா சங்கிலிப் போராட்டத்தை நடத்த தீர்மானித்துள்ளோம் எனக் கூறினார்.

அடுத்த கட்டமாக, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை முடக்கவும் அதை தொடர்ந்து, கடலில் இறங்கி கறுப்புக் கொடிப் போராட்டத்தை நடத்துவதற்கும் தீவிரமாக சிந்தித்து வருகின்றோம்.

கொரோனா காலத்தில், போராட்டங்களில் ஈடுபடுவது பொருத்தமற்றது என்ற போதிலும், எமக்கு ஏற்படுத்தப்படுகின்ற வாழ்வாதார அச்சுறுத்தல் காரணமாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, போராட்டங்களை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

---

சடலங்களை தகனம் செய்வதற்கான

# 'இடமே தெரிவு செய்யப்பட்டுள்ளது'



■ நடராஜா கிருஸ்ணகுமார்

மின்சாரம் மூலம் சடலங்களை எரியூட்டுவதற்கான கட்டடம் அமைப்பதற்கான நிதியோ, அனுமதியோ இதுவரை கிடைக்கவில்லை என, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கொரோனா காரணமாக, முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் சடலங்களை எரியூட்டுவதற்காக, தண்ணிரூற்று - நெடுங்கேணி வீதியில் உள்ள இடமொன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

ஆனால், மின்சாரம் மூலம் எரியூட்டுவதற்கான கட்டடத்தை அமைப்பதற்கான அனுமதியோ, நிதியோ இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவித்த அவர், 03 கோடி ரூபாய் வரை மின்சாரம் மூலம் சடலங்களை எரிப்பதற்கான கட்டடம் அமைப்பதற்கான செலவுகள் ஏற்படும் எனவும் கூறினார். 'அக்கட்டட வேலைகளும் மூன்று மாதங்களுக்கும் மேல் முன்னெடுக்கப்பட நேரிடும். அதனால், இப்போதைய சூழலில் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் இருந்து சடலங்களை தகனம் செய்வதற்கான இடமே தெரிவு செய்யப்பட்டுள்ளது' மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

---

விபத்தில்

# குடும்பஸ்தர் படுகாயம்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் வீதியில், மன்னாகண்டல் பகுதியில், நேற்று முன்தினம் (04) மாலை இடம்பெற்ற விபத்தில், குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மன்னாகண்டல் பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய குடும்பஸ்தரே, இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

புதுக்குடியிருப்பில் இருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர், ஒட்டுசுட்டானில் இருந்து வந்துகொண்டிருந்த ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில், புதுக்குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



---

'இடமே தெரிவு செய்யப்பட்டுள்ளது'

# 2ஆவது தடுப்பூசி

## செலுத்தும் பணி ஆரம்பம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன், மு.தமிழ்ச்செல்வன்



கிளிநொச்சி மாவட்டத்தில், இன்று (6) முதல் இரண்டாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பமாவதாக, கிளிநொச்சி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அதற்கு அமைவாக, கிளி. மத்திய மகா வித்தி., புனித திரேசா பெண்கள் கல்லூரி, உருத்திரபுரம் ஆரம்ப வைத்தியசாலை, வட்டக்கச்சி மத்திய கல்லூரி, அக்கராயன் மகா வித்தி., பாரதிபுரம் மகா வித்தி., புன்னை நீராவி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பிரமந்தனாறு கிராம சேவையாளர் அலுவலகம், தர்மபுரம் மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் தடுப்பூசிகளை செலுத்திக்கொள்ளலாம்.

---

முல்லைத்தீவுக்கான

# ஒருதொகை சீனி வந்தடைந்தது

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் சீனி பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட விலை நிர்ணயத்தில், மக்களுக்கு சீனியை வழங்கும் நடவடிக்கையில், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஈடுபட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு, முதற்கட்டமாக, 80 ஆயிரம் கிலோகிராம் சீனியை, கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டுள்ளதாக, பலநோக்கு கூட்டுறவு சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், மாவட்டத்தில் தனியார் வணிக நிலையங்கள் 200 ரூபாய் வரையில் சீனியை விற்பனை செய்து வருகின்றார்கள் என்றார்.

சீனிக்கான தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில், அதனை நிவர்த்தி செய்து மக்களுக்கு தேவையான சீனியை கிராமங்களின் கூட்டுறவு சங்கங்கள் ஊடாக வழங்கும் நடவடிக்கையில் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் ஈடுபட்டுள்ளது எனவும், அவர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட சீனியை கரைத்துறைப்பற்று பலநோக்கு கூட்டுறவு சங்கம், புதுக்குடியிருப்பு பலநோக்கு கூட்டுறவு சங்கம், ஒட்டுசுட்டான் பலநோக்கு கூட்டுறவு சங்கம், துணுக்காய் பலநோக்கு கூட்டுறவு சங்கம் விசுவமடு பலநோக்கு கூட்டுறவு சங்கம் ஆகியவற்றின் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப் படவுள்ளது எனவும் கூறினார்.

---

கொவிட் ஜனாஸாக்களை கிண்ணியாவில்

# வட்டமடுவில் அடக்க அனுமதி

■ ஒலுமுதீன் கியாஸ்



கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்வர்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு கிண்ணியா வட்டமடு கிராமத்தில் 10 ஏக்கர் அரச காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்காணியை, கொவிட் 19 தொழில்நுட்ப குழு ஆய்வுகளை மேற்கொண்டு சிபாரிசு செய்ததையடுத்தே, கொவிட் 19 செயலணியாலும் சுகாதார அமைச்சாலும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்காணியில் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் பணிகள், இன்றிலிருந்து (06) ஆரம்பிக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இம்மையவாடியில் சுமார் 4,000 ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்படுவதற்கான இட வசதியுள்ளதாகவும் கிண்ணியா பிரதேச சபைத் தவிசாளர் கே.எம். நிஹார் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிகையில், "தற்போது மையவாடிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மையவாடிக்குள் 14 உள் வீதிகள் அமைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன. மையவாடியைச் சூழ சுமார் 10 கிலோமீற்றர் மதில் எழுப்பப்படவுள்ளது. மின்சார வசதிகள் மற்றும் ஜனாஸாக்களின் உறவினர்களுக்கான வசதிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

"ஓட்டமாவடி, மஜ்மா நகர் கொவிட் 19 மையவாடியின் நிலப்பரப்பு ஜனாஸாக்களால் பூரணமாகியுள்ள நிலையில், கிண்ணியா வட்டமடு கிராம மையவாடியை துரிதமாக ஏற்பாடு செய்யும்படி பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன" என்றார்.

---

தவிசாளர்

# கேர்ணல் விசேட சந்திப்பு



■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு, காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.அஸ்பரை, கல்லடி இராணுவ முகாம் 231ஆம் படைப்பிரிவின் பிரிகேடியர் கேர்ணல் துலிப் பண்டார, நகர சபை மண்டபத்தில் வைத்து நேற்று (05) சந்தித்தார்.

காத்தான்குடியில் கொரோனா நிலைமை உட்பட பல்வேறு விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பில், குருக்கள் மடம் இராணுவ முகாம் இணைப்பதிகாரி ஏ.எம். டபிள்யூ.உதயகுமார, மேஜர் வை.எம்.யு.வி.யாப்பா, கெப்டன் அத்துக்கொரல, இராணுவ சிவில் பாதுகாப்பு அதிகாரிகள், காத்தான்குடி நகர சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

---

தமிழர் பிரதேசத்தில்

# மதரஸா அமைப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது



■ வி.ரி.சகாதேவராஜா, வா.கிருஸ்ணா

தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் ஒரு மதரஸா அமைப்பதானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

கோவில் வீதி காணி விவகாரத்தில் எத்தரப்பையும் பாதிக்காத தீர்வே அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் (04) மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். கல்முனை தமிழர் பிரதேச காணி சர்ச்சை விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உறுப்பினர் ராஜன் கூறுகையில்:

"தமிழர்கள் செறிந்துவாழும் கல்முனை இரண்டாம் பிரிவில் அமைந்துள்ள கோவில் வீதியில், தமிழர் ஒருவருக்கு சொந்தமான காணியை, முஸ்லிம் ஒருவருக்கு அந்த காணி உரிமையாளர் விற்பனை செய்துள்ளார்.

"முஸ்லிம் ஒருவருக்கு காணியை விற்றதால் எழுந்த சர்ச்சையை அடுத்து, அந்தக் காணியை தமிழர் ஒருவரே திரும்பிவாங்க, முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் (வி. முரளிதரன்) ஏற்பாடு செய்து, ஒரு பேட்ச் காணியை ஒரு இலட்சம் ரூபாய் வீதம் விற்பனை செய்ய 6 மாதம் கால அவகாசமும் வழங்கப்பட்டு, 8 மாதங்கள் கடந்த நிலையில், இன்னும் அந்தக் காணியை எந்தத் தமிழரும் கொள்வனவு செய்ய முன்வரவில்லை.

"யாரும் எங்கும் சட்ட ரீதியாக குடியிருக்கலாம். அதனை யாரும் தடுக்க முடியாது. அவர்களின் காணியில் அவர்கள் குடியிருக்க முழு உரிமையும் உள்ளது. ஆனால், அந்தக் காணியில் மதரஸா கட்டுவது பொருத்தமான ஒன்றல்ல. தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் இவ்வாறு ஒரு மதரஸா அமைப்பதானது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்" என்றார்.

---

# 12 அடி நீளம் உடைய கொப்புறா பிடிபட்டது

■ ஏ.எல்.எம்.ஷினாஸ், பாறுக் ஷிஹான்

கல்முனை கடற்கரையில் மீனவர் ஒருவருக்கு சுமார் 300 கிலோகிராம் எடை உடைய 12 அடி நீளம் கொண்ட கொப்புற மீன் நேற்று (05) பிடிபட்டது.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் உள்ள போதிலும் மீன்பிடி தொழிலாளர்கள், தமது தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக, மீனவர்கள் தமது மீன்பிடி தொழிலை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

கல்முனை கடற்கரைப் பகுதியில் மீனவர் ஒருவருக்கு பிடிபட்ட இந்த மீனின் பெறுமதி சுமார் மூன்று இலட்சம் ரூபாய் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, இம் மீன் வியாபாரிக்கு சுமார் 50 கிலோகிராம் எடையுள்ள திருக்கை இன மீன் ஒன்றும் பிடிபட்டது.

பிடித்த மீன்களை சுகாதார சட்ட விதிமுறைகளை பின்பற்றி மீனவர்கள் விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

இனந்தெரியாத நபர்களால்

# இயந்திரப்படகு தீயில் நாசம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியஉப்போடை பகுதியில் இயந்திரப் படகு ஒன்று இனந்தெரியாத நபர்களால்தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

பெரியஉப்போடை வாவிக்கரை வீதியிலுள்ள களப்புக்குள் இருந்த படகே இவ்வாறு இனந்தெரியாத நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.



நேற்று (05) அதிகாலை மீன்பிடிக்கச்செல்வதற்காக படகின் உரிமையாளர் வந்தபோது படகு எரிக்கப்பட்டுள்ளதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

படகும் அதனுடன் இருந்த இயந்திரமும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது. இதன்காரணமாக, அம்மீனவருக்கு சுமார் 06 இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மூடப்பட்டுள்ள வெஸ்டோல் வைத்தியசாலையால்

# ஐந்து தோட்ட மக்கள் பாதிப்பு

## திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

ரஞ்சித் ராஜபக்ஸ



மத்திய மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் நிர்வகிக்கப்பட்ட, வெஸ்டோல் பிரதேச வைத்தியசாலையானது, கடந்த 3 வருடங்களாக மூடப்பட்டுள்ளதால் குறித்த வைத்தியசாலையை அண்மித்த 5 தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

2009ஆம் ஆண்டு, இந்த வைத்தியசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றதுடன், பாரிய நிதி செலவில் நவீனமயப்படுத்தப்பட்ட குறித்த வைத்தியசாலை, 2018ஆம் ஆண்டு வரை செயற்பாட்டில் இருந்துள்ளது.

30 பேர் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதிகளைக் கொண்ட இந்த வைத்தியசாலை, கடந்த 3 வருடங்களாக மூடப்பட்டிருக்கும் அதேவேளை, நாவலப்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலிருந்து மாதாந்தம் ஒரு தாதி அதிகாரி, இங்கு வருகை தந்து கிளினிக் நடவடிக்கைகளை மாத்திரம் முன்னெடுப்பதாக பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இதனால் ரிலாகல, வெஸ்ட்டோல், பார்கேபல், பாரண்டா, போகில், கடியன்லேன ஆகிய தோட்டங்களைச் சேர்ந்தவர்கள், தமக்கான சிகிச்சைகளுக்காக 13 கிலோமீற்றர் தூரத்திலுள்ள நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கே செல்கின்றனர்.

மேலும், இந்த வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதால், வைத்தியசாலைக்குள் உள்ள உபகரணங்கள் செயழிலந்து மீண்டும் பயன்படுத்தபட முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ள பிரதேசவாசிகள், மீண்டும் இந்த வைத்தியசாலையைத் திறக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

அனுமதிப்பத்திரமின்றி

# தலவாக்கலை நகருக்குள் 17 ஓட்டோக்கள் கைப்பற்றப்பட்டன

பி.கேதீஸ், ரஞ்சித் ராஜபக்ஸ



தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி தலவாக்கலை நகருக்குள் பயணித்த, 17 ஓட்டோக்களையும் மோட்டார் சைக்கிளொன்றையும் தலவாக்கலை பொலிஸார் கைப்பற்றினர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறி, எவ்விதமான அனுமதிப்பத்திரங்களும் இன்றி, குறித்த வாகனங்கள் பயணித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை, அக்கரப்பத்தனை, திம்புள்ள பத்தனை பகுதிகளைச் சேர்ந்த ஓட்டோக்களே இவ்வாறு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்டுள்ளன ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவர்களுக்கு எதிராக, நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளையில்

## வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதி

மஹேஸ் கீர்த்திரத்ன

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், மாத்தளை மாவட்டத்தில் இன்று (6) காலை 6 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை அத்தியாவசிய பொருள்கைளை விநியோகிக்கும் வர்த்தக நிலையங்களை திறந்து வைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, இறைச்சி விற்பனை நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள், சில்லறைக் கடைகள் உள்ளிட்டவைகளைத் திறக்க மாத்தளை மாவட்ட கொரோனா ஒழிப்பு குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய, அத்தியாவசிய பொருள் கொள்வனவுக்காக குடும்பத்திலிருந்து ஒருவர் மாத்திரம் செல்ல முடியும் என்றும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச சபை உறுப்பினர்

# எச்சரிக்கப்பட்டு விடுதலை

எஸ்.சதீஸ், ரஞ்சித் ராஜபக்ஸ

பொகவந்தலாவை நகரில் அமைந்துள்ள விடுதியிலிருந்து, மதுபான போத்தல்களை, மிகவும் சூட்சுமமாக தோட்டப்புற மக்களுக்கு விநியோகிப்பதற்காக எடுத்துச் செல்ல முற்பட்ட குறித்த விடுதியின் உரிமையாளரான, நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட 7 பேர் கைதுசெய்யப்பட்டு, கடுமையான எச்சரிக்கையின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்று பரவலுடன், தனிமைப்படுத்தும் ஊரடங்கு உத்தரவுக்கமைய, குறித்த விடுதியும் மூடப்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் (4) இரவு 10 மணியளவில் குறித்த பிரதேச சபை உறுப்பினர் உள்ளிட்ட 7 பேர் விடுதியைத் திறந்துள்ளனர்.

அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மதுபான போத்தல்களை தோட்டப்புறங்களில் விற்பனை செய்வதற்காக எடுத்துச் செல்ல தயாரானபோது, பொகவந்தலாவை பொலிஸாரால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.




தோட்டப்புறங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காகவே, மதுபானங்களை கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படுவதாக, பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமையவே குறித்த விடுதி சுற்றிவளைக்கப்பட்டு, சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

எனினும், நேற்று முன்தினம் (4) இரவே கடுமையான எச்சரிக்கையின் பின்னர் சந்தேகநபர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என, பொகவந்தலாவை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவசரகால சட்டத்தால்

# சர்வாதிகார ஆட்சி தலைதூக்கும் அபாயம்

## திகாம்பரம் எம்.பி தெரிவிப்பு

துவாரகஷான்

ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தால், நாட்டில் சர்வாதிகார ஆட்சி தலைதூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அவர், மேலும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கொரோனா நெருக்கடி மிக்க காலகட்டத்தில் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அவசரகால சட்டத்தை அமல்படுத்தியுள்ளார்கள். இது நாட்டுக்கு பிழையான முன்னுதாரணமாகும்.

உணவுத் தட்டுப்பாடு, அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு போன்றவற்றைப் பூர்த்தி செய்ய, நுகர்வோர் அதிகார சட்டத்தில் தேவையான ஏற்பாடுகள் உள்ளன.

சிவில் நிர்வாகம் இடம்பெறும் ஜனநாயக நாட்டில், யுத்தம் இல்லாத காலத்தில் அவசரகால சட்டத்தை அமல்படுதியுள்ளமை மிகவும் ஆபத்தான ஒன்றாகும். அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த, நுகர்வோர் அதிகார சபை சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை அமல்படுத்தி நிர்வகிக்க வேண்டும். ஆனால், தற்போது உள்ள அவசரகால சட்டமானது பாதுகாப்பு விடயங்களுடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. இது மக்களை அநாவசிய அச்சத்தில் தள்ளும் செயற்பாடாகவே நாம் பார்க்கிறோம்.

இந்தச் சட்டத்தின் ஊடாக, ஜனாதிபதியின் சர்வாதிகார ஆட்சி நடைபெறுமே தவிர, மக்களுக்கு நன்மை எதுவும் கிடைக்காது. மேலும், தற்போது உள்ள அவசரகால சட்டத்தில் இராணுவத்தினர், யாரையும் எந்த நேரத்திலும் கைது செய்ய முடியும்; சுட்டுக் கொல்லவும் முடியும்; பொதுமக்களின் சொத்துகளை அபகரிக்கவும் முடியும். அதற்கு எதிராக வழக்குத் தொடரும் உரிமை, பொது மக்களுக்குக் கிடையாது.

ஜனநாயக நாட்டில், கொரோனா ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அனர்த்த முகாமைத்துவ அவசரகால நிலையையும், உணவுத் தட்டுப்பாடு பிரச்சினையைத் தீர்க்க, நுகர்வோர் அதிகார சபையின் அவசரகால நிலையையும் பிரகடனப்படுத்தி செயற்பட வேண்டுமேயொழிய, யுத்த காலத்தில் அமல்படுத்த வேண்டிய அவசரகால சட்டத்தை அல்ல; அவ்வாறு பிரகடனப்படுத்தும் போது, அது சர்வாதிகார ஆட்சிக்கே வித்திடும் என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தொண்டமானின் வாழ்க்கை வரலாற்றை

# பாடத்திட்டத்தில் உள்ளடக்க சிபாரிசு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் அங்கிகாரம் பெற்ற தலைவராகவும் இருந்த, அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் வாழ்க்கை வரலாற்றை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கான சிபாரிசை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கல்வி அமைச்சர் தினேஸ் குணவரத்னவுக்கு வழங்கியுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான், பிரதமரிடம் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே பிரதமர் இதற்கான சிபாரிசை வழங்கியுள்ளார்.

மறைந்த தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 108வது ஜனன தினம் கடந்த 30ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட நிலையிலேயே, அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் சாதனைகளை பாடவிதானங்களில் உள்வாங்குதற்கான கோரிக்கையை செந்தில் தொண்டமான் பிரதமரிடம் விடுத்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.



# உலர் உணவுப் பொருள்கள் கையளிப்பு....

## தெல்தெனிய





தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக வருமானம் இன்றி பாதிக்கப்பட்டுள்ள தெல்தெனிய பிரதேச மக்களுக்கு மனிதாபிமான நிவாரணப் பொருள்களை, கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு மற்றும் 'எல்விட்டாஸ்' நிறுவனம் என்பன இணைந்து வழங்கின. (மொஹொமட் ஆஸிக்)

## கண்டி

கண்டி, மஹிய்யாவப் பிரதேசத்திலுள்ள 200 குடும்பங்களுக்கு, அவுஸ்திரேலியாவில் வசிக்கும், இலங்கையர்களான, அநுரத்த எதிரிசிங்க, துசார விஜேசுந்தர, திலக் சந்த, நிமால் ஜயரத்ன, முத்துமணி ஆகியோரால் உலருணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. (இக்பால் அலி)





## நானுஓயா

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலுக்கு அமைய, இ.தொ.காவின் உப செயலாளர் சச்சுதானந்தன் ஊடாக நானுஓயா, கிரிமிட்டிய, லோன், அவோக்கா பகுதிகளில் பாதிக்கப்பட்டுள்ள வலது குறைந்தவர்களுக்கான நிவாரணப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.





## புஸ்ஸல்லாவ

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொத்மலை இளைஞர் அணியின் ஏற்பாட்டில், புஸ்ஸல்லாவ பகுதியில் வருமானத்தை இழந்த, 30க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் கையளிக்கப்பட்டன. (பா.திருஞானம்)





## இரத்தினபுரி





இரத்தினபுரி மாவட்டத்தில் கொவிட் 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு உலர் உணவு பொருள்கள் உட்பட அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்பட்டன. (சிவாணிஸ்ரீ )

## வட்டகொடை

பொது முடக்கத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள வட்டக்கொடை மேற்பிரிவு, வட்டக்கொடை கீழ்பிரிவு, யொக்ஸ்போட் ஆகிய தோட்டப் பிரிவுகளைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வட்டக்கொடை தோட்ட அதிகாரி துல்சங்க ஜயதிலக்கவால் 35 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீட்டில் அத்தியாவசிய உணவு பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (பி.கேதீஸ்)





# தலைவர்களே! கவனிக்கவும்; புத்தர் சிலைகள் அவசரமாக முளைக்கின்றன

அவசர காலச்சட்டத்தின் கீழ், ஜனாதிபதியின் ஆட்சியே நடைபெறும் என்றும், தான் நினைத்தாற்போல், ஒழுங்குவிதிகளை மாற்றியமைத்துக் கொள்ளமுடியும்; இது பேராபத்தானது என, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்தமை, கொஞ்சம் கொஞ்சமாக நிரூபணமாகும் அளவுக்கு சம்பவங்கள் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

யுத்த காலத்தில், நாடளாவிய ரீதியில் பொலிஸ் வீதித்தடைகள் மாகாண, மாவட்ட எல்லைகளிலும் நிறுவப்பட்டன. பொலிஸ் சோதனைச் சாவடியென எழுதப்பட்டிருந்தாலும், ஆயுதம் தரித்த இராணுவத்தினரே கடமையில் இருந்தனர். அவ்வாறு தற்காலிகமாக நிறுவப்பட்ட சோதனைச் சாவடிகளில் பல நிரந்தரமாக்கப்பட்டு உள்ளன.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில், அவ்வாறான சோதனைச் சாவடிகளை தற்போதும் காணமுடியும். கொரோனா தொற்றையடுத்து, அமலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தால், மாகாண அல்லது மாவட்ட எல்லைகளில், பொலிஸ் சோதனைச் சாவடிகள் நிறுவப்பட்டன. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நீடிக்க, நீடிக்க, சோதனைச்சாவடிகளும் நிரந்தரமாகிவிட்டன.

மலையகத்தைப் பொறுத்தவரையில், ஆங்காங்கே நிறுவப்பட்ட சோதனைச் சாவடிகள், காலூன்றிக்கொண்டன. அங்கு கடமையிலிருக்கும் படையினர் வழிபாட்டுக்காக, சிறியதாய் புத்தர் சிலையொன்றை வைத்து வழிபாடுகளில் ஈடுபட்டதை அவதானித்திருப்போம். அச்சிலையும் வருடத்துக்கு வருடம் வயது ஏறுவதைப்போல, வளர்ச்சியடைந்து நிற்கும்.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில், முகாம்களுக்கு அண்மையில், புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டு, அங்கு விஹாரை கட்டப்பட்டு, அப்பிரதேசமே சிங்கள- பௌத்த மயமாக்கப்பட்டுள்ளதை பல இடங்களில் கண்டிருக்கின்றோம். சில, நாசுக்காகவும் இன்னும் பல அதட்டாகவும் தொல்பொருள் ஆராய்ச்சி எனும் பெயரில் சூட்சுமமாகவும், புத்தர் சிலைகள் வைக்கப்பட்டு விஹாரைகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

மலையகத்தை பொறுத்தவரையில், 1983ஆம் ஆண்டுக்கு முன்னர், தற்காலிகமாக அமைக்கப்பட்ட சோதனைச்சாவடிகள் இன்னுமிருக்கின்றன. பெரும்பாலும் கிராம-தோட்ட எல்லைகளிலேயே அச்சாவடிகள் அமைக்கப்படும். ஏற்கெனவே, குறிப்பிட்டதைப் போல, சின்னதாய் புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டு, பின்னர் நிரந்தரமாக்கப்படும்.

கிராமங்களுக்கும் பெருந்தோட்டங்களுக்கும் இடையிலான எல்லையை மையப்படுத்தி வைக்கப்படும் புத்தர் சிலைகளை அண்மித்து, சிறியதாய் குக்கிராமம் உருவாக்கப்படும். அதுவே, தனியாக கிராமங்களாக உருவாகிய கசப்பான உண்மைகள் பல உள்ளன.

இது மாவட்டத்தின் சனப்பரம்பலை பாதிக்கும்; மக்களின் பிரதிநிதித்துவத்தை குறைக்கும்; தேவையான உதவிகளில் பெரும்பாலானவற்றை, அந்தக் கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையொன்று ஏற்படும்.

நாட்டில் தற்போது அவசரகால நிலைமையைப் பயன்படுத்தி, தமிழர்கள் செறிந்துவாழும் பிரதேசங்களில், இவ்வாறு புத்தர் சிலைகள் அதட்டாக வைக்கப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. ஆகையால், மலையகத் தலைமைத்துவங்கள் இதுகுறித்தும் கண்ணாய் இருப்பது காலத்தின் தேவையாகுமென வலியுறுத்துகின்றோம்.

## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

டாம்பீகமாக வெளியில் காட்டுவதற்காக, வங்கிகளில் கடன்பெற்று, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி, வீட்டை அழகுபடுத்தும் சிலர் செய்யும் செயல் நகைப்புக்குரியது.

வெளிப்பகட்டு வாழ்க்கையால் என்ன பயன் கிடைக்கப்போகின்றது? கடனை அடைக்க முடியாமல், அவமானத்தையே தேடிக்கொள்கின்றார்கள்.

வங்கிகள், மக்கள் நலனுக்காகவே அமைக்கப்பட்டன. அடிக்கடி கடன் பெறுவோர், சேமிப்பு என்றால் என்ன என்று தெரியாமல் போய் விடுகின்றார்கள்.

மற்றவர்கள் போல வசதியாக வாழ வேண்டும் என எண்ணுகின்றவர்கள், அவர்களைப் போல உழைக்க வேண்டும் எனச் சிந்திப்பதில்லை. பேராசையின் வடிவங்களாக உருமாறினால், என்றும் ஏக்கத்துடன் தான் வாழவேண்டும். இருக்கும் வசதிகளை அனுபவிக்கும் அதேவேளை, நேர்மையான, புதிய நல்ல வழிகளில் முயற்சி எடுக்கவேண்டும்.

தெருவில் வண்டியில் உணவுவிற்று முன்னேறியவர்கள், கோடீஸ்வரராக மாறியதுண்டு. வாழும் முறைதான் விதியை நிர்ணயிக்கிறது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சூடு கண்ட பூனை



என்.கே. அஷோக்பரன்

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், ஜனாதிபதியால் அவசரகால நிலை, 2021 ஒகஸ்ட் 30ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் வழங்கலை உறுதிசெய்யும் காரணத்தின் நிமித்தமாக, அவசரகால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனால், அவசரகால நிலை பிறப்பிப்பு என்பது, ஜனாதிபதியின் கையில் கிட்டத்தட்ட எல்லாம் வல்ல அதிகாரத்தைக் கையளிப்பது போன்றதாகும். இதன் பாதகங்கள் பற்றி, ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண, ஜனாதிபதி சட்டத்தரணியும் எம்.பியுமான எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் நிறையவே, பொதுவெளியில் பதிவு செய்து வருகிறார்கள்.

இந்த இடத்தில், இரண்டு கேள்விகள் எழுகின்றன. முதலாவது, இந்த அவசர கால நிலைப் பிரகடனம் அவசியம் தானா?

இரண்டாவது, உணவுத் தட்டுப்பாடு ஒன்று ஏற்படும் என்ற அச்சம், இலங்கை மக்கள் மத்தியில் எவ்வாறு பரவ ஆரம்பித்தது?

கொவிட்-19 பெருந்தொற்று, இலங்கையைப் பீடித்து ஒன்றரை ஆண்டுகளைத் தாண்டியும், 'கொவிட்-19' என்ற பெருஞ்சவாலை எதிர்கொள்வதற்காக எந்தவொரு பொழுதிலும், அவசரகாலநிலை பிறப்பிக்கப்படவில்லை. அது, அவசியமில்லை என்று, அரசாங்கம் சுட்டிக்காட்டி இருந்தது.

இதற்கான காரணத்தை, தனது கட்டுரையொன்றில் விவரிக்கும் கலாநிதி விக்கிரமரட்ண, 'கொவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்ட ஆரம்ப காலத்தில், பாராளுமன்றத்தைக் கலைத்து, தேர்தல் வைப்பதில் அரசாங்கம் குறியாக இருந்தது. ஏனெனில், அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டால் பாராளுமன்றத்தில் அதற்கான அங்கிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகிறது. அன்றைய பாராளுமன்றத்தில், இந்த அரசாங்கத்துக்குப் பெரும்பான்மை இருக்கவில்லை. அத்தோடு, தேர்தல் நடத்துவதில் அரசாங்கம் குறியாக இருந்தது' என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

ஆகவே, கலாநிதி விக்கிரமரட்ணவின் கருத்தின்படி, ஒருவேளை அன்று, பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு அறுதிப் பெரும்பான்மை இருந்திருக்குமானால், கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக அவசரகாலநிலை பிறப்பிக்கப்பட்டிருக்கும். ஆனால், கொவிட்-19 பெருந்தொற்றை எதிர்கொள்ள, அவசரகாலநிலை தேவையில்லை என்று சொன்ன இந்த அரசாங்கத்துக்கு உணவு வழங்கலை உறுதிசெய்ய, அவசரகாலநிலை தேவையா என்ற கேள்வி இங்கு எழுவது தவிர்க்க முடியாதது.

இந்தக் கேள்விக்கான பதிலைத் தேடுவதில், மேற்சொன்ன இரண்டாவது கேள்வி முக்கியம் பெறுகிறது. உணவுத்தட்டுப்பாடு ஒன்று ஏற்படும் என்ற அச்ச நிலை, இலங்கைக்கு ஏன் வந்தது?

கொவிட்-19 பெருந்தொற்று உலகளாவிய பொருட்கள், சேவைகள் வழங்கல் விநியோகத்தைக் கணிசமாகப் பாதித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால், இதைத் தாண்டியும் சிங்கப்பூர் போன்ற உணவுக்காக இறக்குமதியை மட்டுமே நம்பிய நாடுகள், சுமூகமாக இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன என்பதும், இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

அப்படியானால், உள்ளூரில் உணவு உற்பத்தி நடக்கும் இலங்கை போன்ற நாட்டில், உணவுத் தட்டுப்பாட்டு அச்ச நிலை வரக் காரணமென்ன?

உணவு உற்பத்தியில், இலங்கை தன்னிறைவு பெற்ற நாடல்ல. ஆகவே, உணவுக்காக இறக்குமதியிலும் கணிசமாக இலங்கை தங்கியிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்னர், உள்ளூர் உற்பத்தியை ஊக்கப்படுத்துகிறோம் என்ற பெயரிலும், டொலர் கையிருப்பை தக்கவைக்கவும் அரசாங்கம் இறக்குமதித் தடைகளை அறிமுகப்படுத்தியது. இதில், பொதுமக்களின் கடும் விசனத்துக்கு உள்ளான தடையென்றால், மஞ்சள் இறக்குமதிக்கான தடையைக் குறிப்பிடலாம்.

தண்ணீரில் கரைத்து வீட்டுக்குத் தெளிக்குமளவிற்கு மலிவாக இருந்த மஞ்சள், சில நாட்களில் ஒரு கிலோ 7000-வைத் தாண்டிய ஒரு விலைமதிப்பு மிக்க பொருளாக இந்த இறக்குமதித் தடையின் பின்னர் மாறிவிட்டது. உள்நாட்டு உற்பத்தி அதிகரித்ததும், விலை குறையும் என்று அன்று சொன்ன அரசியல்வாதிகளின் கருத்து, அவர்களது வாக்குறுதியைப் போலவே இன்று பல மாதங்கள் கடந்தும் பொய்யாகவே இருக்கிறது.

இறக்குமதியைத் தடைசெய்தால், உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கும் என்ற பத்தாம் ஆண்டு மாணவனின் பொருளியல் அறிவளவு ஞானத்தில் சிந்தித்து இறக்குமதியைத் தடைசெய்துவிட்டு, அதன் பிறகு உள்நாட்டு உணவு உற்பத்தியின் ஆணிவேரான இரசாயன உர இறக்குமதியையும் இந்த அரசாங்கம் தடை செய்தது.

டொலர் கையிருப்பைப் பாதுகாத்தல் அதற்கான ஒரு காரணமாகச் சொல்லப்பட்டது. இப்போது, எப்படி உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது? பத்தாம் ஆண்டு மாணவனின் பொருளியல் அறிவளவான ஞானம், திக்கி விக்கி நிற்கிறது.

இறக்குமதியை அனுமதித்தால், டொலர் கையிருப்பு குறையும். டொலர் கையிருப்பைப் பாதுகாக்க, இறக்குமதியைத் தடைசெய்தால், உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை வரும். அப்படியானால் என்னதான் செய்வது?

உலக நாடுகளில் இத்தகைய பொருளாதார, நிதி நெருக்கடிகள் எழும்போது, அவற்றுக்கு உதவி செய்யவும், வழிகாட்டவும்தான் சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புகள் இருக்கின்றன. இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பல மாதங்களுக்கு முன்பே நாடியிருக்க வேண்டும்.

அதனூடாகத் திட்டமிட்ட முறையில், பொருளாதார மறுசீரமைப்புத் திட்டங்களை முன்னெடுத்து, இலங்கையின் பொருளாதாரத்தை பெரும் வீழ்ச்சியிலிருந்து பாதுகாப்பது முடியாத காரியமல்ல.

ஆனால், வறட்டுப் பிடிவாதமும் 'நான்' என்ற அகங்காரமும் கொண்ட தலைமைகள், பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களைத் தவிர்த்து, தற்காலிக கடன்களை அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் என்று வாங்கி, வெறுமனே சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி, அடிப்படை பொருளியல் அறிவு இல்லாத, ஆனால் அதிகாரத் திமிரும் வறட்டுப் பிடிவாதமும் ஆணவமும் கொண்ட தலைமைகளின் அடுத்தடுத்த பிழையான பல முடிவுகள்தான், இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைக்குக் காரணம்.

இங்கு பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலையும், உணவு வழங்கல் எனும் பொருளியல் பிரச்சினையைத் தீர்க்காது. 'மடிவற்றிய மாட்டை, எவ்வளவு அடித்தாலும் சூடு போட்டாலும், அது பால் கறக்காது' என்று, அதன் முட்டாள் உரிமையாளனுக்கு யார் சொல்லிப் புரிய வைப்பது? 1970களிலும் இலங்கை இதே போன்றதொரு பொருளாதார நிலையை எதிர்கொண்டது. அப்போதும், உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவென ஆட்சியிலிருந்த கூட்டம் இறக்குமதியைத் தடை செய்து, மூடிய பொருளாதாரத்தை உருவாக்கியது.

அன்றைய காலத்தில் வாழ்ந்த முன்னைய தலைமுறையிடம், ஐந்து மணிக்கு பாண் வாங்க வரிசையில் காத்துக்கிடந்த கதைகளையும் உடுப்புத் தைக்க துணிவாங்க மாதக்கணக்காக காத்திருந்த கதைகளையும் அந்த நரக அனுபவங்களையும் கேட்டுப்பாருங்கள்!

ஏழு வருடங்கள் இலங்கையை இருண்ட காலத்துக்குள் தள்ளிய சிறிமாவினதும் 'தோழர்'களினதும் கொடுமையான ஆட்சி அது. அன்றும் 'கலாநிதிகள்' பல பேர் அந்த ஆட்சியில் இருந்தார்கள். அரிசிச் சோறும் கறியும் உண்டு வாழ்ந்த இலங்கையர்களை, மரவள்ளிக்கிழங்கு தின்று உயிர்பிழைக்க வைத்த 'அறிவுஜீவிகள்' அவர்கள்.

உலகநாடுகள் ஒன்றிலொன்று தங்கிய, பொருளாதார சூழல் உருவாகிவிட்ட பின்னர், நாம் இறக்குமதியை தடை செய்வோம்; அதனூடாக உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்போம் என்பதெல்லாம் காலாவதியாகிப்போன பொருளியல் சிந்தனைகள்.

ஏற்றுமதி, இறக்குமதி சமநிலையைத் தக்கவைக்க, ஏற்றுமதிக்கான கேள்வியை அதிகரிப்பதும், ஏற்றுமதிக்கான வழங்கலை அதிகரிப்பதும் தான் மிகச் சிறந்த, நன்மை பயக்கின்ற உபாயமாகும். அதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். உணவு உள்ளிட்ட ஏறத்தாழ எல்லா உற்பத்திகளுக்கும் வெளிநாடுகளை நம்பிய சிங்கப்பூர், மாலைதீவு போன்ற நாடுகளால், தமது இறக்குமதியைச் சமாளிக்கக் கூடியளவுக்கு டொலர் வரவைத் தக்கவைக்க முடியுமென்றால், இயற்கை வளங்களும் மனித வளமும் மிக்க இலங்கையால், அது முடியாது போனால், இலங்கையில் நிர்வாகத்தில் மிகப் பெரிய பிழை இருக்கிறது என்று தான் அர்த்தம்.

இலங்கையின் அரசியல் தலைவர்களும் இலங்கையின் மக்களும் காலாவதியாகிப்போன பொருளியல் சிந்தனைகளிலிருந்து வெளிவர வேண்டும். 1970களில், ஒரு முறை கண்ட சூடு, இலங்கை என்ற பூனைக்குப் போதுமாக இருந்திருக்க வேண்டும். இல்லையென்றால், வட-கொரியாவைப் போன்றதொரு நாடாகத் தான் நாம் ஆவோம். ஆனால், வடகொரியாவிடம் அணு ஆயுதமாவது இருக்கிறது. நாம் எதுவுமற்ற 'கோமாளி' நாடாகத்தான் ஆகிவிடுவோம்.

## கடிதங்கள்

### திக்குவில் கிராமத்தில்

## பாடசாலை காணியை மீட்குமாறு கோரிக்கை

கிண்ணியா கல்வி வலயத்துக்கு உட்பட்ட காக்காமுனை அப்துல் ஹமீது வித்தியாலயத்துக்குச் சொந்தமான அரச காணியை மீட்டுத்தருமாறு, மாணவர்களும் பெற்றோர்களும் கோரிக்கை விடுகின்றனர்.

1995ஆம் ஆண்டு கிண்ணியாவை பிறப்பிடமாகக் கொண்ட அப்துல் ஹமீதின் மூத்த மகன், தனது தந்தையின் மறைவுக்குப் பின்னர், தந்தையின் ஞாபகார்த்தமாக பாடசாலையொன்றை நிர்மாணிப்பதற்குக் காணி வழங்கியிருந்தார்.

இருந்தபோதிலும், ஊரடங்குச் சட்டம் அமலில் இருக்கும் வேளையில், பாடசாலை நிர்வாகத்துக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும் தெரியாமல், தனியாரொருவர் காணியைத் துப்புரவு செய்து, உழுது, வேலி அடைப்பதற்கான ஆயத்த வேலைகளை முன்னெடுத்து வருகின்றார். தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமலில் இருந்த வேளை, உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி, தனக்குச் சொந்தமான காணியெனக் கூறி உழுது, பாடசாலை விளையாட்டு மைதானத்தில் காணப்பட்ட கோல் கம்பங்களையும் பிடுங்கி வீசியுள்ளார்.

பாடசாலைக்குச் சொந்தமான அரச காணியை, தனியாரொருவர் துப்புரவு செய்து, தன்னுடைய காணி எனக் கூறுவது, எதிர்கால மாணவர்களுக்கு செய்யும் துரோகமாகும். எனவே, கிண்ணியா பிரதேச செயலகம், பொறுப்பதிகாரி, காணி அலுவலகம் ஆகியவை மிக விரைவில் கவனம் செலுத்தி, பாடசாலைக்குச் சொந்தமான காணியை மீட்டுத் தருவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஏ.ஆர். எம். றிபாஸ்

## சர்வதேச நாணய நிதிய உதவி

# இப்போதைக்கு தேவையில்லை

நாட்டு எதிர்கொண்டுள்ள அந்நியச் செலாவணி மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை இப்போதைக்கு நாட வேண்டிய தேவை இல்லை என நிதி, மூலதனச் சந்தைகள் மற்றும் பொது வர்த்தகங்கள் மீளமைப்பு அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.




தற்போதைய சூழலில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை நாட வேண்டிய அவசியமில்லை. எமது திட்டங்கள் மற்றும் புதிய முன்னெடுப்புகளினூடாக, இலங்கை சர்வதேச அமைப்புகளிடமிருந்தும் நாடுகளிடமிருந்தும் பெற்றுக் கொண்ட கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலையை எதிர்கொள்ளாது என்பதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டிய தேவை இல்லை எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக இலங்கை தனது கடன் மீளச் செலுத்தல்களை பேணி வந்துள்ளது. எதிர்காலத்திலும் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களை மீளச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

எதிர்கட்சியினரின் கோரிக்கையான, நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு காணப்படும் ஒரே வழி சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை நாடுவது என தெரிவிக்கப்பட்டிருந்தமைக்கு பதிலளிக்கும் வகையில் அமைச்சர் கப்ரால் இவ்வாறு தெரிவித்தார்.

திருவனந்தபுரம்

## கேரளாவில் மீண்டும்

# வௌவால்கள் மூலம் பரவும் 'நிபா' வைரஸ்; சிறுவன் பலி

நிபா வைரஸ் நோய் பழந்தின்னி வௌவால்கள் மூலம் பரவுகிறது. எனவே அணில், வௌவால்கள் கடித்த பழங்களை சாப்பிடக்கூடாது. பலாப்பழம், கொய்யாப்பழம், மாம்பழம் போன்றவற்றை சுத்தமாக கழுவியபிறகுதான் சாப்பிட வேண்டும். வௌவாலின் கழிவுகளில் இருந்து தான் நிபா வைரஸ் பரவுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



கேரளாவில் கடந்த 2018ஆம் ஆண்டு இதேபோன்று கோழிக்கோடு, மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் நிபா வைரஸ் பரவல் ஏற்பட்டது. நிபா தாக்குதலுக்கு கேரளாவில் 17 பேர் உயிரிழந்தனர். இந்தநிலையில் கொரோனா இரண்டாம் அலையால் நாட்டிலேயே அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலமாக கேரளா உள்ளது. இந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்பு கேரளாவில் நிபா வைரஸ் தொற்று கண்டறியப் பட்டது. கோழிக்கோடு மாவட்டம் சூலூரை சேர்ந்த 12 வயது சிறுவன் ஒருவர் கடந்த இரண்டாம் திகதி உடல்நலக்குறைவுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அச்சிறுவனுக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் அவருக்கு நிபா வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் சிகிச்சைப் பலனின்றி சிறுவன் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பரிதாபமாக உயிரிழந்தார். நிபா வைரஸ் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு பரவும் திறன் கொண்டது என்பதால், சிறுவனின் குடும்பத்தினர், நேரடி தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

நிபா வைரஸின் அறிகுறிகளாக காய்ச்சல், கழுத்து வலி, தலைச்சுற்றல், வயிற்று வலி, வாந்தி, உடல் சோர்வு, சுவாசத்தில் பிரச்சினை, மனக்குழப்பம், உளறல் போன்றவை கூறப்படுகின்றன.

## உயர் வழமையான புதிய வியாபார வளர்ச்சியை

# யூனியன் அஷ்யூரன்ஸ் பதிவு

நடப்பு நிதியாண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியை வேகமாக வளர்ந்து வரும் ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநராக யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்திருந்தது. வழமையான புதிய வியாபார கட்டுப்பண வளர்ச்சியை 65% ஆக பதிவு செய்திருந்ததுடன், தொற்றுப்பரவல் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த வியாபாரச் சூழலிலும் இலங்கையின் சிறந்த 5 ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநர் மத்தியில் தம்மைப் பதிவு செய்திருந்தது.

2021 ஜுன் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆறு மாத காலப்பகுதியில் நிறுவனம் GWP பெறுமதியாக 6.5 பில்லியன் ரூபாயை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 29% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது.


ஜூட் கோம்ஸ்
முதன்மை செயல் அதிகாரி - யூனியன் அஷ்யூரன்ஸ் பி.எல்.சி

நிறுவனத்தின் நிதிப் பெறுபேறுகள் தொடர்பாக யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "2021 ஜனவரி முதல் ஜுன் வரையான காலப்பகுதியில் யூனியன் அஷ்யூரன்ஸ் பதிவு செய்திருந்த நிதிப் பெறுபேறுகள் என்பது உறுதியான செயற்திறன் மற்றும் தந்திரோபாயமான வழிநடத்தல் போன்றவற்றினூடாக வழிநடத்தப்பட்டிருந்ததுடன், துறையின் சிறந்த ஐந்து காப்புறுதி சேவை வழங்குநர்களில் ஒன்றாகத் திகழ்வதற்கும் ஏதுவாக அமைந்திருந்தது. டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகள் மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய செயற்பாடுகளினூடாக, தொடுகைஅற்ற வாடிக்கையாளர் உதவிச் சேவைகளான 24/7 மும்மொழிகளிலும் இயங்கும் அழைப்பு நிலையம், ஒன்லைன் chat bot, WhatsApp, Clicklife சுய சேவை app மற்றும் Clicklife டிஜிட்டல் தீர்வு போன்றன உள்ளடங்கியிருந்தன. கொவிட்-19 உடன் தொடர்புடைய உரிமை கோரல்கள் அடங்கலாக ரூ. 1.7 பில்லியனுக்கு அதிக பெறுமதியான உரிமை கோரல்களை நாம் வழங்கியிருந்தோம். கொவிட் விதிமுறைகளின் பிரகாரம் ஊழியர்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் நாம் தொடர்ந்தும் செயலாற்றியிருந்ததுடன், எமது பங்காளர்களுக்கு அர்ப்பணிப்பை உறுதி செய்வதற்காக எமது உத்வேகமான அணியின் செயற்பாட்டை நாம் முன்னெடுத்திருந்தோம்" என்றார்.

நிலைபேறான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில், நிறுவனம் GWP இல் 5 ஆண்டு கால திரண்ட வருடாந்த வளர்ச்சி வீதமாக (CAGR) 13% ஐ பதிவு செய்திருந்தது. மேலும், நிறுவனத்தின் வரிக்கு பிந்திய இலாபம் (PAT) முதல் அரையாண்டு காலப்பகுதியில் 19% இனால் அதிகரித்து ரூ. 402 மில்லியனாக பதிவாகியிருந்தது. வரிக்கு முந்திய இலாபம் (PBT) ரூ. 462 மில்லியனாக பதிவாகியிருந்தது. நிறுவனம் ஆரோக்கியமான மூலதன போதுமை விகிதமான 300% ஐ பேணியிருந்தது. இது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான 120% என்பதை விட பெருமளவு அதிகமானதாகும்.

பெங்களூர்

# தெரு நாய்கள் குதறியதில் குழந்தை வைத்தியசாலையில்



பெற்றோர் குழந்தைகளை பராமரிப்பதில் அக்கறை செலுத்துவது மிகவும் அவசியமாகும். குழந்தைகளைப் பெற்றெடுப்பதுதான் தாயின் கடமையல்ல; தகப்பன் வேலை நிமித்தம் வெளியில் செல்லவேண்டியிருக்கும். குழந்தையை அவதானமாக வைத்திருக்கவேண்டியதும் மிக முக்கியமாகும்.

பெங்களூரிலுள்ள தனது வீட்டின் வெளியே விளையாடிய இரண்டு வயது பெண் குழந்தையை, தெரு நாய்கள் கடித்து குதறிய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. நாய்கள் கடித்து குதறிய குழந்தை மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறது.

பெங்களூரு எச்.ஏ.எல் அருகிலுள்ள, நாராயண ரெட்டித் தெருவில் இரண்டு வயது பெண் குழந்தை, நேற்று மதியம் வீட்டின் வெளியே விளையாடியது. அப்போது, கூட்டமாக வந்த தெரு நாய்கள், குழந்தை மீது பாய்ந்து கடித்தன. இதில் கழுத்து, காது, தொடை பகுதியில் காயமடைந்த குழந்தை, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறது.

இப்பகுதியில் தெரு நாய்களின் தொந்தரவு, இது முதன் முறையல்ல. நாய்களின் தொந்தரவை போக்க நடவடிக்கை எடுக்கும்படி பெங்களூர் மாநகராட்சியிடம், மக்கள் பலமுறை வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உத்தரப் பிரதேசம்

## கிழக்கு பகுதியிலுள்ள 6 மாவட்டங்களில்

# மர்மக் காய்ச்சலால் பல குழந்தைகள் பலி



உத்தரப் பிரதேசத்தில் தற்போது குழந்தைகளிடையே தோன்றும் ஒரு வகை மர்மக் காய்ச்சலால் பல குழந்தைகள் பலியாகி வருகின்றனர்.

பல குழந்தைகளுக்கு கடுமையான காய்ச்சலும், அதில் சிலருக்கு மூட்டு வலி, தலைவலி, குமட்டல் ஆகியவையும் ஏற்பட்டன. சிலருக்கு கை, கால்களில் தடிப்புகள் ஏற்பட்டன.

உத்தரப் பிரதேசத்தின் கிழக்கு பகுதியில் உள்ள 6 மாவட்டங்களில் குறைந்தது 50 பேர் குறிப்பாக குழந்தைகள், இந்த காய்ச்சலால் உயிரிழந்தனர். பல நூற்றுக்கும் அதிகமானோர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். ஆனால்,உயிரிழந்த யாருக்கும் கொரோனா தொற்று பாதிப்பு இல்லை.

மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகள் குறிப்பாக சிறுவர்கள் மருத்துவமனையில் வெகு வேகமாக உயிரிழக்கின்றனர் என பிரோசாபாத் மாவட்டத்தின் சிரேஷ்ட சுகாதார அதிகாரி தெரிவித்துள்ளார். மேலும், இந்த மாவட்டத்தில் கடந்த வாரம் 32 குழந்தைகள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர். பெண் கொசுக்களால் இந்த டெங்கு நோய் பரவுகிறது. இந்தியாவில் பலநூறு ஆண்டுகளாக இந்த நோய் பாதிப்பு உள்ளது.

## சூழல் பாதுகாப்பு தொடர்பில் eSiphala ஊடாக

# ஒன்லைன் விரிவுரை முன்னெடுப்பு

SLT-MOBITEL மற்றும் இலங்கை இயற்கை ஆர்வலர்கள் (LNC) அமைப்பு ஆகியன இணைந்து மாதாந்த இலவச ஒன்லைன் விரிவுரைத் தொடரை eSiphala ஊடாக முன்னெடுத்து, நாட்டின் செழுமையான சூழல்சார் பாரம்பரியம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வந்துள்ளன. COVID-19 & Future Conservation Challenges, Recognizing commonly found Venomous and Non-Venomous Snakes, What if Mangroes are not there? ஆகிய தலைப்புகளில் மூன்று விரிவுரைகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. கொழும்பு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் பிரிவின் பேராசிரியரும், இலங்கையிலுள்ள முன்னணி பறவையியல் வல்லுநர் (ornithologist) வித்யாஜோதி, பேராசிரியர் சரத் கொட்டகம, ஆய்வாளரும், சூழலியலாளரும், இயற்கை புகைப்படக் கலைஞரும் பேராசிரியருமான மென்டிஸ் விக்ரமசிங்க, வயம்ப பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், தேசிய கண்டல்காடு நிபுணர் குழுவின் தலைமை அதிகாரியும், பொதுநலவாய ப்ளூ காபன் திட்டத்தின் அங்கத்தவருமான பேராசிரியர் செவ்வந்தி ஜயக்கொடி ஆகியோர் கலந்து கொண்டனர்.




LNC என்பது இலங்கையில் இயங்கும் தன்னார்வ, இலாப நோக்கற்ற வனஜீவராசிகள், இயற்கை ஆர்வலர்கள், செயற்பாட்டாளர்களைக் கொண்ட அமைப்பாகும். இளம் விலங்குகள் சம்மேளனத்தின் (YZA) கடந்த கால அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்பு என்பதுடன், இவர்கள் மீள ஒன்றிணைந்து இலங்கையின் இயற்கை சூழல்கட்டமைப்புகளை பாதுகாப்பதற்கு முன்வந்துள்ளனர்.

எதிர்காலத் தலைமுறையினருக்கு இயற்கை சூழலை பாதுகாத்து பேணி வழங்குவதற்கான அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளதுடன், அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயலாற்றும் பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மைக் குடிமகன் எனும் வகையிலும், SLT-MOBITEL ஆனது LNC உடன் கைகோர்த்து, 'Earth is calling are you listening?' எனும் தொனிப்பொருளில் விரிவுரைகள் அமைந்திருந்ததுடன், உயிரியல் பரம்பல் தொடர்பில் அனைவரின் கவனத்தை ஈர்ப்பதாகவும் இருந்தது.

இந்தத் திட்டம் தொடர்பாக SLT இன் பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "எமது இயற்கை சூழல், வளங்களை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சரியான மற்றும் விஞ்ஞான ரீதியான தகவல்களை ஆர்வத்துடன் எதிர்பார்க்கும் பொது மக்களுக்கு விரிவுரைத் தொடரினூடாக சரியான களம் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. சூழல் தொடர்பில் கவனம் செலுத்துகின்றமைக்காக SLT-MOBITEL தன்னை ஆழமாக அர்ப்பணித்துள்ளதுடன், இவ்வாறான விரிவுரைகளை ஏற்பாடு செய்வதனூடாக, மேலும் பல பாதுகாப்பு முயற்சிகளை முன்னெடுக்க முடியும் என்பதுடன், எமது எளிதில் பாதிப்புறக்கூடிய சூழல்கட்டமைப்புகளை பாதுகாப்பதற்கு பங்களிப்பு வழங்குவதாக அமைந்திருக்கும்" என்றார்.

உலகில் உயிரியல்பரம்பல் அதிகளவில் காணப்படும் நாடுகளில் 34ஆம் இடத்தில் இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், போதியளவு விழிப்புணர்வின்மை காரணமாக, மாசடைதல், வனஅழிப்பு, காலநிலை மாற்றம் போன்ற இடர்களால் நாட்டின் பெறுமதி வாய்ந்த சூழல்கட்டமைப்புகள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன என்பவை கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

திருப்பதி

# பல்கலைக்கழக வளாகத்தில் இரவில் சிறுத்தை நடமாட்டம்

திருப்பதியில் தேவஸ்தானத்துக்கு சொந்தமான ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகிறது. கொரோனா தொற்று ஊரடங்குக்கு பிறகு தற்போது கல்லூரிகள் திறக்கப்பட்டு மாணவர்கள் வகுப்புகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

இங்கு வெளியூரில் வசிக்கும் மாணவர்கள் பலர் விடுதியில் தங்கி படித்து வருகின்றனர்.

இந்நிலையில் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் விடுதி அருகே இரவில் சிறுத்தை ஒன்று அந்த பக்கமாக வந்துள்ளது. அதை பார்த்த மாணவர்கள் பயந்து ஓடி விடுதி அறையை பூட்டி அறைக்குள் சென்றனர். சில மாணவர்கள் மோட்டார் சைக்கிள்களின் ஒலியை எழுப்பினர். அந்த சப்தம் கேட்டு சிறுத்தை மீண்டும் வன பகுதிக்குள் ஓடியது.

ஸ்ரீவெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம் அடர்ந்த வனப்பகுதிக்கு அருகில் இருப்பதாலும், பல மாதங்களாக மாணவர்கள் நடமாட்டமின்றி விடுதிகள் இருந்ததாலும் சிறுத்தைகள் அப்பகுதியில் வலம் வருகின்றன.



சென்னை

## டுவிட்டரில் விஜயகாந்த்

# 'நலத்துடன் உள்ளேன்'



துபாய்க்கு சிகிச்சைக்குச் சென்ற விஜயகாந்த் தற்போது நலத்துடன் உள்ளதாக டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்ற கழக (தே.மு.தி.க.) தலைவர் விஜயகாந்துக்கு கடந்த சில வருடங்களுக்கு முன் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதனையடுத்து அவர், அமெரிக்காவில் சிகிச்சை மேற்கொண்டார். அவ்வப்போது உடல்நிலை பாதிக்கப்படுவதால் தற்போது துபாயில் சிகிச்சையில் உள்ளார். அவரது மகன் சண்முக பாண்டியன் உடன் சென்றார்.

இந்நிலையில் விஜயகாந்த் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில் 'நான் நல்ல உடல் நலத்துடன் உள்ளேன். நான் நடித்த 'சத்ரியன்' திரைப்படத்தை, எனது சிகிச்சைக்கு உதவிபுரியும் செவிலியர் சகோதரிகளுடன் பார்த்த போது எடுத்த படம் என்று பதிவிட்டு அது குறித்த புகைப்படத்தையும் வெளியிட்டு உள்ளார்.

பிரித்தானியா

# மகாராணி மரணிக்கும் முன்னரே மரண ஏற்பாடுகள் கசிந்தன

பிரித்தானியாவின் ராணி 2 ஆம் எலிசபெத்திற்கு தற்போது 95 வயது ஆகிறது.

இந்நிலையில் அவர் இறந்த பின்னர் செய்யப்படவேண்டிய ஏற்பாடுகள் தொடர்பான ஆவணமொன்று வெளியே கசிந்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

'ஒப்ரேஷன் லண்டன் பிரிட்ஜ்' (*Operation London Bridge* )எனப் பெயரிடப்பட்டுள்ள இவ் ஆவணமானது, அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட 'பொலிரிக்கோ' (*Politico*) என்னும் செய்தி நிறுவனத்தினால் கசியவிடப்பட்டுள்ளது.

குறித்த ஆவணத்தின்படி, ராணி எலிசபெத் இறந்த பின்னர் அவரது



உடல் 10 நாள்கள் கழித்து தகனம் செய்யப்படும்; இறுதிச்சடங்கு ஊர்வலம், இளவரசர் சார்ள்ஸ் தலைமையில் நடக்கும்; தகனம் செய்யப்படுவதற்கு முன், அரியணையில் ஏறவுள்ள இளவரசர் சார்ள்ஸ், பிரித்தானியாவில் நான்கு நாள்கள் சுற்றுப் பயணம் செல்வார் என்றும் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாராளுமன்ற வளாகத்தில் மூன்று நாள்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும், ராணியின் பூதவுடலைப் பார்க்க, பெருந்திரளான மக்கள் லண்டனை நோக்கிவர வாய்ப்பிருப்பதால் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் எனவும் அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த ஆவணம் கசிந்தமை தொடர்பாக, அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.



# நாளை மூன்றாம் போட்டி

## டக்வேர்த் லூயிஸ் முறையால் இலங்கையை வென்றது தென் ஆபிரிக்கா

இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் தென் ஆபிரிக்க அணியுடனான இறுதி ஒருநாள் போட்டி நாளை (07) செவ்வாய்க்கிழமை, கொழும்பு, ஆர். பிரேமதாச சர்வதேச விளையாட்டரங்கில் நடை பெறவுள்ளது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்தப் போட்டியில், முதலாவது போட்டியில், இலங்கை அணி வெற்றியீட்டிக்கொண்டது.

இரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி, சனிக்கிழமை (04) நடைபெற்றது. அதில், தென் ஆபிரிக்க அணி, 67 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

எதிராக கொழும்பு, ஆர். பிரேமதாச சர்வதேச விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில், டக்வேர்த் லூயிஸ் முறைமையின் பிரகாரமே தென் ஆபிரிக்க அணி வெற்றியீட்டியது.

3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரின், இரண்டாவது போட்டியில் தென் ஆபிரிக்கா வெற்றியீட்டியதன் பின்னர், இரண்டு அணிகளுக்கும் இடையிலான 1 □ 1 என சமப்படுத்தப்பட்டுள்ளது.

மழை காரணமாக ஒன்றரை மணி நேரம் தாமதித்து ஆரம்பித்த இப் போட்டி அணிக்கு 47 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்து ஆடிய, தென் ஆபிரிக்கா அணி, 284 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

அந்த இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை, 25ஆவது ஓவரில் 4 விக்கெட்களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அதன்போது மழை பெய்ததால் ஆட்டம் தடைப்பட்டது.

அந்த சந்தர்ப்பத்தில் டக்வேர்த் லூயிஸ் முறைமைப் பிரகாரம் இலங்கை 41 ஓட்டங்களால் பின்னிலையில் இருந்தது.

20 நிமிட தடையின் பின்னர் மீண்டும் ஆட்டம் தொடர்ந்தபோது இலங்கையின் வெற்றி இலக்கு 41 ஓவர்களில் 265 ஓட்டங்கள் என திருத்தி அமைக்கப்பட்டது.

ஆனால், இலங்கை 36.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 197 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

ஆப்கானிஸ்தான்

# சீனாவுடன் கை கோர்க்கும் தலிபான்கள்



ஆப்கானிஸ்தானில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள தலிபான்கள், தங்களின் மிக முக்கிய பங்காளி சீனா எனத் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக, தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஸபிஹுல்லா முஜாஹித் (*Zabihullah Mujahid*) கூறியதாவது: "சீனா எங்களின் மிக முக்கிய பங்காளி. ஆப்கானிஸ்தானை பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதற்கு சீனா தயாராக உள்ளது. ஆப்கானிஸ்தானில் வளமான சுரங்கங்கள் உள்ளன. சீனாவின் உதவியால் அவற்றை மீண்டும் செயற்படவைக்கவும் நவீனமயப்படுத்தவும் உலகெங்கிலும் உள்ள சந்தைகளுக்கு எங்கள் சுரங்க தயாரிப்புகளை எடுத்துச் செல்லவும் முடியும்.

அத்துடன், ஆபிரிக்கா, ஆசியா, ஐரோப்பா ஆகியவற்றுடன் சீனாவை இணைக்க முயற்சிக்கும் சீனாவின் *One Belt One Road* முயற்சிக்கு, நாங்கள் ஆதரவு தெரிவிக்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், காபூலில் தனது தூதரகத்தை திறந்து வைத்திருக்க சீனா உறுதி அளித்துள்ளதாகவும் ஆப்கானுக்கு மனிதாபிமான உதவிகளை அதிகரிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் புதிய தலிபான் அரசு தீவிரவாத குழுக்கள் உடனான உறவைக் கைவிட வேண்டும் என்றும் சீனா வலியுறுத்தியுள்ளாகவும் தெரிவிக்கப்படுகிறது.








# சைக்கிள் போராட்டம்

ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வுகள் ஆரம்பமாக உள்ளன. இந்நிலையில், இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்களுக்கான சர்வதேச விசாரணை கோரி, புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் ஓர் அங்கமாக, பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில், லண்டனில் இருந்து ஜெனீவா வரை சைக்கிளில் பயணிக்கும் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

கடந்த 2ஆம் திகதி பிரித்தானியா பிரதமர் இல்லத்துக்கு முன்னால் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சைக்கிள் போராட்டம், ஐரோப்பிய நாடுகள் ஊடாக, எதிர்வரும் 20ஆம் திகதி ஜெனீவாவை சென்றடையவுள்ளது.

இந்தப் பயணத்தின் 2ஆவது நாள் போராட்டம், நெதர்லாந்து தமிழ் பேரவையின் ஏற்பாட்டில், நெதர்லாந்தின் டென்ஹாக் நகரில் அமைந்துள்ள அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் (03) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டவர்கள், சர்வதேச விசாரணை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரி கோஷமிட்டனர்.

இதேவேளை, மனித உரிமைகள் விவகாரம் மற்றும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தொடரில், இலங்கைக்கு சாதகமான தீர்வு எட்டப்படும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அண்மையில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அமெரிக்க ஓபன் டென்னிஸ் – 3வது சுற்றில்

# நவோமி ஒசாகா அதிர்ச்சி தோல்வி

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் 4 ஆவது சுற்றுக்கு ஸ்பெயினின் கார்பின் முகுருஜா, ருமேனியாவின் சிமோனா ஹாலெப், ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் முன்னேறினர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியனும், தரவரிசையில் 3 ஆவது இடத்தில் இருப்பவருமான ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா, 73 ஆம் நிலை வீராங்கனையான 18 வயது லேலா பெர்னாண்டசை (கனடா) எதிர்கொண்டார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் முதல் செட்டை கைப்பற்றிய ஒசாகா 2-ஆவது செட்டை டைபிரேக்கரில் பறிகொடுத்தார். இதனால் அடுத்த செட்டில் உத்வேகத்துடன் செயல்பட்ட லேலா பெர்னாண்டஸ் அதனை கைப்பற்றியதுடன் பட்டத்தை தக்க வைக்கும் ஒசாகாவின் ஆசைக்கும் ஆப்பு வைத்தார்.

சுமார் 2 மணி 4 நிமிடம் நீடித்த இந்த ஆட்டத்தில் லேலா பெர்னாண்டஸ் 5-7, 7-6 (7-2), 6-4 என்ற செட் கணக்கில் நவோமி ஒசாகாவுக்கு அதிர்ச்சி அளித்து நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

தோல்விக்கு பிறகு நவோமி ஒசாகா கண்ணீர் மல்க கூறுகையில், "இந்த தோல்வி குறித்து வார்த்தைகளால் விவரிப்பது மிகவும் கடினம். இச் சூழ்நிலையில் இருந்து மீள என்ன செய்ய வேண்டும் என்பதை கண்டுபிடிக்க வேண்டிய நிலையில் இருப்பதாக உணருகிறேன்" என்றார். நவோமி ஒசாகா மன அழுத்தம் காரணமாக கடந்த மே மாதம் நடந்த பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் 2 ஆவது சுற்றில் இருந்து விலகினார். அடுத்து நடந்த விம்பிள்டன் போட்டியில் இருந்தும் முழுமையாக ஒதுங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரோஹித் சர்மாவின் வெளிநாட்டு முதல் சதம்



லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வரும் இங்கிலாந்து அணிக்கு எதிரான 4 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 2-வது இன்னிங்ஸில் வலுவான நிலையை எட்டியுள்ளது. ரோஹித் சர்மாவின் முத்தாய்ப்பான சதம், புஜாரா, ராகுலின் பொறுப்பான பேட்டிங் ஆகியவற்றால் இந்த வலுவான நிலைமை எட்டமுடிந்துள்ளது.

3 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 270 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. அணித்தலைவர் விராட் கோலி 22 ஓட்டங்களுடனம் , ஜடேஜா 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.முன்னதாக இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 191 ஓட்டங்களும், இங்கிலாந்து அணி 290 ஓட்டங்களும் சேர்த்தன.

இந்திய அணியின் ஸ்கோர் உயர்வுக்கு காரணமாக அமைந்த ஹிட்மேன் ரோஹித் சர்மா, பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி தனது 8 ஆவது டெஸ்ட் சதத்தை நிறைவு செய்து 127 ஓட்டங்களில் (14பவுண்டரி, ஒருசிக்ஸர்) ஆட்டமிழந்தார்.

கே.எல்.ராகுலுடன் சேர்ந்து 83 ஓட்டங்கள், இணை ஆட்டங்களை அமைத்த ரோஹித் சர்மா, புஜாராவுடன் சேர்ந்து 2 ஆவது விக்கெட்டுக்கு 153 ஓட்டங்களைச் சேர்த்து இந்திய அணி வலுவான ஓட்டங்களை எட்ட உதவினார். ரோஹித் சர்மா கடந்த 8 ஆண்டுகளாக 46 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 7 சதங்கள் அடித்திருந்தாலும் அதில் ஒரு சதம்கூட வெளிநாட்டில் அடித்தது இல்லை.ஆனால், முதல்முறையாக வெளிநாட்டில் ரோஹித் சர்மா சதத்தை பதிவு செய்துள்ளார். அதிலும் கடினமான ஆடுகளங்களைக் கொண்ட இங்கிலாந்தில் அவர் சதம் அடித்தது நிச்சயம் அவருக்கு மறக்கமுடியாத இனிய நினைவாக அமையும்.

பிரான்ஸ்

# வாழ்க்கையை மிளிரச் செய்த குழி

பிரான்ஸைச் சேர்ந்த பிரான்கொய்ஸ் மியோன் எனும் நபர், தனது வீட்டைப் புதுப்பிக்க எண்ணி அதற்கான பணிகளை ஆரம்பித்துள்ள நிலையில் வீட்டின் கட்டுமானத்திற்கு நடுவே ஓர் உலோகப் பெட்டி இருந்ததைப் பார்த்த பணியாளர், அதனை மியோனிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து அப்பெட்டியைத் திறந்து பார்த்தபோது, அதற்குள் தங்க நாணயங்கள் இருந்தமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சில நாள்கள் கடந்த நிலையில், மேலும், ஓர் இடத்தில் ஒரு பைக்குள் இன்னும் சில தங்க நாணயங்கள்



கிடைக்கப்பெற்றுள்ளன.


மொத்தமாக, 239 தங்க நாணயங்கள் இப்போது அவரிடம் உள்ள நிலையில், அந்நாணயங்கள் ஏலத்தில் விடப்படவுள்ளதாகவும் அவை 250,000 யூரோக்கள் முதல் 300,000 யூரோக்கள் வரை ஏலம் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இவ் ஏலத்தின் மூலம் கிடைக்கும் தொகையை வீட்டின் உரிமையாளர்களும், பணியாட்களும் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ள முடிவு செய்துள்ளனர் எனக்கூறப்பட்டடுள்ளது.

பிரான்ஸின் சட்டப்படி, புதையல்கள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமாகும். ஆனால், 2016க்குப் பிறகு வாங்கப்பட்ட நிலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புதையல்களுக்குத்தான் இந்தச் சட்டம் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

பார ஒலிம்பிக்கில்

# பெட்மீட்டனில் இந்திய வீரர் கிருஷ்ணாவுக்கு மகுடம்



டோக்கியோவில் நடைபெற்ற பரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான பெட்மீட்டன் (எஸ்ஹெச்6) பிரிவில் இந்தியவீரர் கிருஷ்ண நாகர் தங்கப் பதக்கத்தை வென்றார். டோக்கியோவில் கடந்த மாதம் தொடங்கிய மாற்றுத்திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் கடைசி நாளான சனிக்கிழமை (04) ஆண்களுக்கான எஸ்எச்-6 பிரிவில் பெட்மீட்டனுக்கான இறுதி ஆட்டம் நடந்தது.

இதில் ஹொங்காங் வீரர் சூ மான் கியை எதிர்த்து இந்திய வீரர் கிருஷ்ண சாகர். களமிறங்கினார் பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில் சூ மான் கியை 21-17, 16-21, 21-17 என்ற நேர்செட்களில் வீழ்த்தினார் இந்திய வீரர் கிருஷ்ண சாகர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 06 செப்டெம்பர் 2021, இல. 8, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.